JL
m211, N24SR.
N24.1.1.
221858

ANDA. WAMI CHETTIAR. Registered No. M

சரஸ்வதி

PUBLISHERS
THE SARASWATHI PUBLISHING HOUSE
COIMBATORE.

சரஸ்வதி

இஃது ஹிருதயத்தை புவப்பிக்கும் கதா காவியங்களையும், இல்லற வாசிகளையன்றித் துறவறத்தினரும் ஓதியுணர்ந்து தமதறிவை விருத்தி செய்துகொள்ளக்கூடிய ஆராய்ச்சி விஷயங்களையும், பிரபஞ்ச ரகஸ்யங்கள், மர்மங்கள், அநுபவக் குறிப்புகள், சிறுவர் சிறுமியர் கடைப்பிடித் தொழுகவேண்டிய நீதிநெறிகள் செறிந்த இன்புருவான சிறுகதைகள், ஹாஸ்யத் துண்டுகள், வேதாந்த சித்தாந்த வகையில் அரும்பெரும் விஷயங்கள், இந்திய ஆங்கில சரித்திர சாஸ்திர விளக்கங்கள் முதலியவைகளையும், இன்னும் எப்பாலரும் எக்காலமும் வாசித்தறிய வேண்டிய உலக ஞானக் குறிப்புகளையும் தன்னகத்தே கொண்டு டிம்மி $\frac{1}{8}$-அளவில் 56-பக்கங்களுடன் உயர்ந்த காகிதத்தில் அச்சிடப்பட்டு உலவும் ஒரு தமிழ் மாதாந்திர சஞ்சிகை. ஸ்ரீமான். வடுவூர்-கி. துரைசாமி ஐயங்கார் அவர்கள் B. A யால் எழுதப்படும் திகம்பர சாமியார் என்னும் அருமையான நாவலின் இரண்டாம் கதையினை, பிரதிமாதமும் 24-பக்கங்கட்குக் குறையாமல் தன்னுள்கொண்டு விளங்கும். தமிழபிமானிகளின் அன்பான ஆதரணையையே பெரிதும் எதிர்நோக்கியும், தமிழின் தற்கால நிலையும் அரைகுறையாகத் தமிழ் படித்துள்ள நம்மவரும் சீருற வேண்டுமென்னும் எண்ணத்துடனும், இப்பத்திரிகை ஆரம்பிக்கப் பட்டுளதாதலின் தமிழறி நண்பர் யாவரும் நம் 'சரஸ்வதி' க்குச் சந்தாதாரராய்ச் சேர்ந்தும், சந்தாதாரரைச் சேர்த்தும் அவளை ஆதரித்துத் தமிழ்த்தாய்க்குத் தாம் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து, அவளுடையவும் ஸ்ரீசாரதா தேவியுடையவுமாகிய அருட்களைப் பெறுவாராக.

சந்தா விகிதம்.

தபாற்கூலியுட்பட வருட சந்தா	உள்நாட்டிற்கு	ரூ.	2	4	0
	வெளிநாட்டிற்கு	ரூ.	3	0	0

குறிப்புகள்:—1. சஞ்சிகையை வி. பி. மூலம் பெறின் ரூ. 2-9-0 ஆகும் முன்பணமனுப்பினால் ரூ. 2-6-0 தானாகுமென்பது கவனிக்கற்பாலது.

2. சந்தாதாரர்கள் தாம் எழுதும் கடிதங்களின் தலைப்பில் தமது சந்தா நெம்பரைக் குறிக்க மறவாதிருப்பாராக. சந்தா நெம்பர் குறிப்பிடாமல் எழுதுங் கடிதங்கட்கு உடனே பதிலை எதிர்பார்ப்பது அநேகமாய் வியர்த்தமாகும்.

3. வருடத்தின் மத்தியில் எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஜூன்மாதம் முதல் கணக்கு வைக்கப்பட்டு அவ்வருடத்தி லதுவரையில் வெளியான சஞ்சிகைகளை ஒரே முறையில் அனுப்பப்படும்.

பத்திராதிபர்,

'சரஸ்வதி' பிரசுர காரியஸ்தலம்,

பெரியகடை வீதி, கோயம்புத்தூர்.

சரஸ்வதி.

மலர் I. | 1924—ஜூன் | இதழ் I.

முன்னுரை.

எல்லாம் வல்ல இறைவனது திருவருளால் இன்று நமது சரஸ்வதிப் பத்திரிகையைத் தமிழகத்திற்கு அறிமுகம் செய்து வைக்கின்றோம். சரஸ்வதி எனும் நாமம் மிக மிக இனியது, வசீகரமுள்ளது, மனோகரம் ததும்பியது, பூஜார்ஹமானது. கலைவாணியின் அருள் நம்மெல்லோருக்கும் சித்திப்பதாக. நம் நாட்டுச் சிறுவர், சிறுமியர் யாவரும் நாவமரும் கோகிலத்தின் ஆசி பெற்றுய்வாராக.

பல்வகைச் சுவையுடன் பத்திரிகைச் சுவையையும் விரும்புங் காலமிது. பத்திரிகா வாசிப்பிலுள்ள ருசிகரத்தை நம்மவர் தெரிந்து கொண்டு விட்டனர். பத்திரிகைகளின் இன்பம் ஒரு தனியின்பம் என்பதையும் உணரும் ஆற்றல் மிகுந்துவிட்டது. அறிவுப் பெருக்கடைவதற்குப் பத்திரிகைகளே பரமசாதன மென்பதினை யாரே அறியாதார்? அதிலுள்ள மதுரம் வேறெதிலேனும் காண்பது கூடுமோ? ஒவ்வொரு பத்திரிகையும் ஒவ்வொரு சுவைகொண்டு ஒளிர்கின்றது. நன்மை செய்வதற்கு எத்தனை கருவிகளிருப்பினும் போதாவாதலின், புதிதாய்த் தோன்றியுள்ள இந்த சரஸ்வதிப் பத்திரிகையும் தமிழகத்தின் ஆதரவைப் பெற்று நனிசிறந்து விளங்குமென்பது நம் துணிபு.

கலாசாலைக் கல்வியுடன் பத்திரிகைகளின் வாசிப்பையும் பெறும் மாணவர், மாணவிகள் மிகு பாக்கிய ஸம்பன்னர்களாவர். அன்னோர்க்குப் பத்திரிகைகளில் உண்டான விருப்பமொன்றே அவர்களைப் பிற்காலத்தில் உலகத்தில் உயர்ந்தோராகச் செய்வித்து விடும். வாணாள் இறுதி வரைக்கும் பத்திரிகைகளைத் தங்களின் ஹஸ்தபூஷணமாக

மற்போர்தம் வாழ்க்கை அத்யந்த சோபிதத்துடனும் பரிமளிக்கும்: பத்திரிகைகளைப் படிக்கும் பெண்மணிகளால் நடத்தப்படும் இல்லறம் சதுர்வித புருஷார்த்தங்கட்கும் விளைநிலமாகி இவ்வுலகையே நமக்குத் தேவருலகாக்கிவிடும்.

சரஸ்வதிப் பத்திரிகை மனதிற்கு மனோகரமான கதா காவியங்களையும், அறிவுக்கு உணவான ஆராய்ச்சி விஷயங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்கும்: ஒவ்வொன்றையும் அநுபவ பூர்வமாய் எடுத்து விளக்கும். வாசிப்பவர்கட்கு மனக்களிப்பை யுண்டாக்கத் தக்கனவாயும் நீதிநெறிகளைக் கற்பிக்கின்றனவாயுமிருக்கும்; எல்லாத் தரத்தாருக்கும் எக்காலமும் படிப்பதற்குத் தகுந்த விஷயங்களைக் கொண்டதாய் ஜ்வலிக்கும். பெண்மணிகளுக்கு விசேஷித்த பிரயோசனமுள்ளதாய், அவர்களின் சார்பையே பெரிதும் தழுவியதாய் நிலவும்; மற்றும் ஹாஸ்யங்கள், விநோதங்கள், வாழ்க்கைக்கான பகுதிகள், வேதாந்த விஷயங்கள், மேனாட்டின் நவீன சாஸ்திர விளக்கங்கள் இவைபோன்ற வேண்டற்பாலதான பலவற்றையும் விஸ்தாரமாய் எடுத்துரைக்கும். நம் தமிழபிமானிகள் இப்பத்திரிகையை அன்புடன் ஏற்றுப் பாரதியின் அருள்கொண்டு தேசஹித சிந்தகர்களாய் இலங்குமாறு பிரார்த்திக்கின்றோம். ஸர்வலோக சரண்யராகிய ஜகதீசன் நம்மெல்லோரையும் ரக்ஷிப்பாராக.

மங்களம்.

பத்திராசிரியர்.

நமது குடும்ப க்ஷேமம்.

நாம் இவ்வளவு பாடுபடுவதும், காலை முதல் மாலை வரையில் வெளியில் வேலை செய்து இல்லம் திரும்புவதும் நமது குடும்ப க்ஷேமத்திற்காகவேதான். இவ்வுலகில் நமது ஜீவியம் திருப்தியும் பூரிப்புமாக நிலவவேண்டுமாகில் நமது குடும்பம் க்ஷேமமாயிருக்க வேண்டும். நாம் ஆவி பிரியுங் காலத்தும் உயில் முதலிய சாசனப் பத்திரங்களின் மூலமாக நமது காலத்திற்குப் பின்னரும் இன்னின்னவாறு நிகழப்பெற வேண்டுமென்று கண்டு பல திட்டங்களை யமைப்பதும் நமது குடும்ப க்ஷேமத்தைச் சிந்தித்தேதான். நமது குடும்ப க்ஷேமத்தில் நமக்கு சிரத்தை யிருப்பது உண்மையாகில், பெரும்பாலும் நமது பூர்வீகர்களின் சிரேஷ்டமான அநுஷ்டானங்களையே நமது இல்லங்களில் ஆசரிக்கப் பிரவர்த்திக்க வேண்டும். இலை மறைந்த காய்போன்ற அந்த அநுஷ்டானங்களில் அநந்தமான தத்துவங்களும் இகபர சாதனமான அமைப்புகளும் எண்ணற்று நிற்கின்றன. நாஸ்திகத்தையே பெரும்பான்மையும் போதிக்கும் தற்கால அநாகரிகங்களினின்றும் நாம் நம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும். புது நாகரிக மோகத்தில் அழுந்திப்போயிருக்கும் நமது புத்தியையும் யோசனைகளையும் கூட நாம் திருத்திக்கொள்ள முற்படவேண்டும். தற்காலத்திற்கு இன்றியமையாத சில அம்சங்களை மட்டும் நாம் இங்குக் குறிப்பிடுகிறோம். அவற்றைக்கொண்டு அவை போல்வன பலவற்றையும் நாம் செம்மைப்படுத்தி நலம்பெற நாடவேண்டும்.

1. நமது மத விஷயங்களில் நாம் அவ்வாறு சிரத்தைப்படவில்லை. ஏதோ ஆலயத்திற்குச் செல்வதுந் திரும்புவதுமேயன்றி பயபக்தியுடன் மனமுருகி நின்று தியானிக்கும் வழியில் நமது சித்தத்தை அநேகமாக நிலை நிறுத்துவதில்லை. பலபேச்சுக்களினிடையே சாமிக்கும் ஒரு ‘கும்பிடு’ போட்டுவிட்டுத் திரும்புகிறோம். வீடுகளில் நித்திய

தேவாராதனையை நடத்தாது எப்போதோ சில விசேஷகாலங்களில் மட்டும் வைத்துக்கொண்டிருக்கிறோம். நமது சிறுவர் சிறுமியர்கட்கு ஸ்வமத விஷயமான ஞானமேயில்லை. போதிப்பதும் இல்லை. நமது சிறுமியர் அனைவரும் பாதிரிமார்களிடமே பயின்று புறசமய விஸ்வாசிகளாகின்றனர். இராமன், கிருஷ்ணன் இன்னாரெனத் தெரியாவிடினும், ஆதாம், ஏவாள், இயேசுகிருஸ்து இவர்களைப்பற்றி நன்கு சொல்லத் தெரியும். வெறும் நெற்றியாய் இருக்கலாகா தென்பது நமது பூர்வீகர்களின் கண்டிதமான அநுஷ்டானம். அதை எவ்வளவில் நிறைவேற்றி வருகின்றோமென்பதை அவரவரே யோசிக்கட்டும். இவை போன்ற பல குறைகளையும் செப்பனிட்டுக் கொள்ளவேண்டும். நாம் ஊருக்குக் கூறுமுன்பு பிரதமத்தில் நமது இல்லத்தில் உத்தம விதைகளை விதைக்கவேண்டும்.

2. கல்வி விஷயத்திலும் நாம் ஒரு பெரும் பிழைசெய்து விட்டிருக்கிறோம். தெய்வபக்தியின்றி ஏற்படும் கல்வியால் உண்டாகும் பிரயோசனம் துன்மார்க்கத்தைத் தவிர்த்து வேறென்ன ? கல்விக்கும் சன்மார்க்கத்துக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. கற்றோர்களிலநேகர் தவறுதலான கிரியைகளைச் செய்துகொண்டிருக்கின்றனர். கல்வி ஒருவனுடைய அறிவைக் கூர்மைப்படுத்தி விடுமேயன்றி, சன்மார்க்கப் பயிற்சியை யுண்டுபண்ணு மென்பது நிச்சயமில்லை. அது துன்மார்க்கத்திற்கும் நன்மார்க்கத்திற்கும் பொது அளவில் உதவிசெய்ய முற்படும்: மதில்மேற் பூனைபோல அது எப்பக்கமும் திரும்புதல் கூடும். எனவே சன்மார்க்க அஸ்திவாரத்துடன் புகட்டாத கல்வி பயனற்றது. சிறுபோதிலேயே பல தீயவழக்கங்கள் நம் சிறுவர்கட்குப் படிந்து விடுகின்றன. பாடசாலையினின்றும் வீட்டிற்கு வந்ததும் அவர்களின் பாடங்களைக் கேட்டுக் குணங்களைத் திருத்தும் வழக்கத்தினை நம்மவர் கண்டிதமாய் அநுஷ்டிக்கத் தலைப்படவேண்டும். ஏதேனும் ஒரு ஜீவனார்த்த நிமித்தமாகப் படிக்க விடுகிறதென்ற நோக்கத்தை விட்டொழித்து, அவர்களுக்குப் புஸ்தக வாசிப்பிலே ஒருவித ருசிகரமுண்டாகுமாறு தட்டி எழுப்புதல் வேண்டும். ஜீவியகால முற்றும் புத்தகமும் கையுமாகவே நமது சிறுவர் சிறுமியர் இலங்கும் வண்ணம் அவர்களைத் தயாரித்தல் வேண்டும். நமது பெண்மணிகள் தங்களின் நகையொன்றை விற்றேனும் ஒரு நூலினைப் பெறுமாறுக அத்துணை ஆசக்தியை அவர்கட்கு உண்டாக்கவேண்டும். மதாநுசார

மான பாராயணாதிகளில் நல்ல பயிற்சி பெறவும் அவர்களுக்கு வசதி செய்விக்கவேண்டும்.

3. கைத்தொழிலிலும் பயிற்சி பெறச்செய்ய வேண்டும். நூல் ராட்டினத்தின் ஓசை ஒவ்வொரு வீட்டிலும் த்வனிக்க வேண்டும். கல்வியுடன் கைத்தொழில் வர்த்தகம் இவற்றினுள்ளும் பழக்க மேற்படவேண்டும். உத்தியோகத்திலுள்ளவன் தள்ளுண்டால் பிறகு அவனுக்கு வேறு ஜீவனம் கிடைப்பது வெகு கஷ்டமாகிவிடுகிறது. ஒரு வர்த்தகனுக்கேனும் ஒரு கைத்தொழிலாளிக்கேனும் அவ்வித ஏக்கம் தேவை இல்லை. அவர்களுக்கு எக்காலத்திலும் ஜீவிப்பதற்குப் பல வழிகள்—மார்க்கங்கள்—தோன்றிக்கொண்டேயிருக்கும். எந்த நாளிலும் இருவகையான ஜீவனோபாயங்களை ஒருவன் பின்பற்றிச் செல்லவேண்டுமே யன்றி ஒன்றையே ஸ்திரமாக நம்பிவிடுவது கூடாது; அது எப்போதும் நகைப்புக்கிடமேயாம்.

4. சுத்தம் சோறுபோடும் எச்சில் இரக்க வைக்கும் என்பது பழமொழி. நமக்கு மேனாட்டு ஆசாரம் கூடவே கூடாது. நம் முன்னோர்கள் பிரதிநித்யமும் சமயலான பாகங்களைப் பகவானுக்குப் படைத்த பின்னரே உண்பது வழக்கம். அது நமது இல்லங்களில் தவறிப்போய் விட்டதனால்தான் நமது இல்லங்கள் அசுத்தக் களஞ்சியங்களாகி யிருக்கின்றன. சென்னை முதலிய நகரங்களில் பனைமரம்போல வளர்ந்தவர்களுங்கூடப் பாத்திரங்களை எச்சில் செய்கின்றனர். இது துராசாரமாகும். எப்போதோ ஒருமுறை வருகிற விரதாதிகளின்போது மட்டும் நம்மில்லங்களில் பரிசுத்தக் காற்று வீசச்செய்கிறோம். எவ்வளவுக் கெவ்வளவு சுத்தமாயிருக்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு கடவுள் நம்மீது அன்பு கூர்பவராய் இருப்பார். உடைசுத்தம், வாக்கு சுத்தம், மனோசுத்தம், காயசுத்தம் இவைகளும் வேண்டும். ஸ்நானம் செய்யாமல் புசிக்கும் வழக்கத்தைத் தூர அகற்றி ஒதுக்கவேண்டும். வெளியிற் சென்று திரும்பியதும் கால் அலம்புதல் நமது பூர்வீகர்களின் வழக்கம்.

5. வீண் விரயங்களை வரவு சுருங்கிய—விலை வாசிகள் உயர்ந்து விட்ட—இக்காலத்திலும் கொள்வது குடும்பத்திற்கு க்ஷேமகரமன்று. அபார ஸ்திரீதன வரிசைகள், விவாகத்தில் ஏராளமாகச் செலவிடுகை, வரவுக்கு மீறிய செலவினங்கள் இவற்றைக் கண்டிதமாகச் சுருக்கப் பார்க்கவேண்டும். நம்முன்னோர்கள் சுலபமான செலவுகளையே அநுஷ்

டித்தனர்: அவர்களுக்கிருந்த கௌரவம் நமக்கு இப்போதில்லை. கடன் படாதவீடாக நமது குடும்பத்தை வைத்துக்கொண்டு கால் வயிற்றுக் கஞ்சி பருகுவதிலுள்ள பரமசுகம் வேறெதனிலும் காண இயலாது:

6. நித்திரை என்பதும் ஒரு பெரும் விஷயமே. பிராதக் காலத்தில் நான்கு மணிக்கே எழுந்து நீராடச் செல்வது முன்னோர் முறை. பகல் நித்திரையை அவர்கள் அறியார். பத்தினிப்பெண்கள் கணவன் எழுமுன்னர் தாங்கள் துயிலெழுந்து நீராடி நெற்றியில் திலதமிட்டுக்கொண்டு கணவனாரை எழுப்புதல் வேண்டுமென்பதும், நித்திரை விலகியதும் தமது மனைவியின் பிரகாச வதனத்தின் முன்னர் கண் விழிக்க வேண்டுமென்பதும் நமது பூர்வீக அநுஷ்டானம்: இவற்றினை நாம் இப்போதும் அநுஷ்டிப்பின் குடும்பக்ஷேமம் எத்துணை மங்களகரமாய் சோபிக்கும்! சிந்திப்பது நம் கடமை.

7. வணக்கம் என்பது தற்காலத்தில் ஏதோ ஒரு விதமாய் நிகழ்கின்றது. விவாக சந்தர்ப்பங்களில் மட்டும் தோன்றிப் பின் மறைகிறது. கணவனார்க்குப் பாத பூசை செய்தல், பெற்றோர்களை நமஸ்கரித்தல், பெரியோர்களுக்கு வணக்கம் செலுத்துதல் முதலிய ஸத்விஷயங்களிலுள்ள பலாபலன்களையும், அவற்றை விட்டொழித்திருப்பதிலுள்ள தீங்குகளையும் நிதானித்துப் பார்த்துச் செம்மை நலம் பெறவேண்டும்.

8: மாமி மருகியர் மனஸ்தாபங்கள் இன்னும் ஒழிந்தபாடில்லை. குடும்ப க்ஷேமத்திற்கென்று விவாகம் நடத்திவிட்டுப் பின் வீண் மனஸ்தாபக்கள் மிகுந்து பிற்காலத்தில் சகலமும் தனது மருமகளுக்கே யன்றோ சேர்ந்துவிடும் என்று ஏங்கி அல்லும் பகலும் அவர்களை வாட்டிவதைத்தலால் உண்டாகும் பயனென்ன? இதை விரிக்கிற் பெருகும். எவர் வீட்டிலும் நிகழும் விஷயமே யாதலின் குடும்ப க்ஷேமத்திற்குக் குடும்ப சமாதானமும், வீட்டிற்காக உழைப்பவனுக்கு மன ஆறுதலும் அத்தியாவசிய மென்பதனைப் பெரியோர்கள் ஆழச்சிந்தித்து உசிதமானவற்றைத் தேர்ந்து செய்தல் வேண்டும்.

9. உபசரித்தலென்பதும் ஆதரித்தலென்பதும் பிறர்க்கு இரங்கி உதவுகையென்பதும் இந்நாளில் வெகு சுருக்கம். கைசுருக்கமுள்ள பெண்களும் பெருகி விட்டனர். சுயநல உருவினர்களான ஆடவர்களே எண்ணிக்கையில் மிகுதி. பிறர்க்காக உருகும் உத்தம

உள்ளம்—தயாளத்வம்—காண்பதருமையாய் முடிந்தது. பழைய நாளில் பந்துக்கள் ஒருவர் வீட்டிற் கொருவர் வரின் எத்துணையோ அன்போடு க்ஷேமம் விசாரித்தலும் விருந்தளித்தலும் நடைபெறும். இந்நாளிலோ வந்து விட்டார்களாவென்று நடுங்குகின்றனர். வாய் உபசாரப் பேச்சில் அனுப்பிவிடப் பார்க்கின்றனர். ஓர் எளியவனை வைத்து ஆதரித்துக் கரையேற்றி விடுங்காலம் கடந்து விட்டது. வந்தவர் பசித்திருக்க, வீட்டிலுள்ளோர் உண்பது வழக்கமாய் விட்டது. எவருக்கேனும் 'நோய் நொடிகள்' உண்டானாலும் உடனே சென்று பார்ப்பது கிடையாது. 'ரோகம்' முற்றியபின், அவன் இனிப் பிழைப்பது அபூர்வம் எனத்தெரிந்த பிறகு ஒப்புக்கு ஒரு கூட்டமாய் ஒருமுறை சென்று விசாரித்துத் திரும்புவதே வழக்கம். பிறகு போவதேயில்லை. அவன் இறக்கட்டும் ஒரே தடவையாகப் போய் வந்து விடலாமென்று தீர்மானித்து விடுகிறதுமுண்டு. அந்தந்த வீட்டினர் அவரவர் கொண்ட கொடுத்த இடங்களிலுள்ளவர்களிடம் மட்டும் பந்துத்துவமும் விருந்து உபசாராதிகளும் செய்துகொண்டு அவ்வளவுடன் இருந்து கொள்கிறார்கள். மற்ற உறவின் முறையார்களைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை. இவ்விஷயங்களில் நமது முன்னோர்கள் எப்படியிருந்தார்கள்? நாம் எப்படி யிருக்கின்றோம்? இவையெல்லாம் செலவுச் சுருக்கத்திற்காகவே யெனின், நாம் இப்பொழுது செய்யும் செலவுகள் ஒழுங்குள்ளனவா யிருக்கின்றனவா? அநாவசியமானவற்றுள் கை நனைத்துக்கொண்டு அவசியமானவைகளை ஒதுக்குகின்றோம்.

10. விரதாதிகளையேனும் நாம் சரிவர அநுஷ்டிக்கின்றோமா? பெரும் பான்மையானவற்றை விட்டுவிட்டோம். ஏதோ சிலவற்றை மட்டும் தப்பும் தவறுமாக நடத்திவருகின்றோம். விரதநாளில் தான் ஒன்றுக்கு மூன்று மடங்கு அதிகமாக நாம் உண்பது. ஏதோ ஓர் ஆசரிப்புக்காகவே அவற்றை நாம் அநுஷ்டிப்பதன்றிப் பொருளறிந்து நமக்குள் பயன்படுத்திக் கொள்வதில்லை. இதிலும் திருத்தங்கள் வேண்டும்.

11. தேசாபிமானம், பத்திரிகாபிமானம், தாய்மொழியில் சிரத்தை முதலிய குணங்களும் நமக்கு உண்டாக வேண்டும். பிறர் செய்யட்டுமென்று பார்த்துக் கொண்டிருப்பதும், பிறர்க்கு வரும் பத்திரிகைகளைப்படித்து விட்டுக் காலம் போக்குவதும் ஒழுங்கன்று: ஒற்று

மைப்படுவதிலும் பிரிவினைப்படுவதிலேயே நாம் கண்ணாயிருக்கிறோம். நமது சமயத்தையே தழுவிய பஞ்சமர்களைத் தூர ஒதுக்கிவிட்டு, மலம் உண்ணும் நாய்களை நமது மடிமீது உட்காருவித்துக் கொண்டு கொஞ்சுகிறோம். நமக்காக ஒருவர் பாடு பட்டு ஒரு நாற்காலியைச் செய்து கொடுத்தால் அதில் உட்கார்ந்து கொள்ளுவோமேயன்றி நாமே அந்நாற்காலியைச் செய்து கொள்ள நினைப்பதில்லை.

12. நமது ஸமூகக் குறைகளோ மிக மிக. அவற்றைச் சீர்திருத்துவதற்கு நமக்குத் தைரியம் வருவது எந்தக் காலமோ? பால்ய விதவைகளை வதைத்துப் பிராணனை வாங்குகிறோம். கண்டு கேட்டிருந்தும் பால்ய விவாகம் செய்கிறோம். தன் மனைவியை அநியாயமாக நடத்தும் ஒருவனைப் பார்த்து ஏனென்று கேட்க வாயற்றிருக்கிறோம். பிரதானமான வற்றுள் செலவினங்களைக் குறைக்கச் சக்தி தளர்ந்திருக்கிறோம். மதுபானத் தீமைகளையும், பரஸ்திரீகமன அநியாயங்களையும், நமது ஆலயங்களுள் நடக்கும் அக்கிரமங்களையும் அகற்றப் பார்க்காமல் ஸகித்து நிற்கிறோம். முதலாவது நமக்குத் தன் மதிப்பேயில்லை. நம் நாட்டினன் என்று கௌரவிப்பதையே காணோம்!

13. எக்குடும்பங்களிலும் கடன் அதிகமாகிவிட்டது. நகைகள் யாவும் பாங்கிக்கு ஓடுகின்றன. நமது குடித்தனத்தை நாம் செம்மைப் படுத்திக் கொள்வதிலிருந்துதான் குடும்ப க்ஷேமம் ஏற்படவேண்டும். குடும்ப க்ஷேமத்திற்கு இத்தனை விஷயங்களிலும் சீர்திருத்தம் வேண்டியிருக்கின்றது: நமது கடமைகளை நாம் நன்குணர்ந்து விரைவில் விழிப்பெய்துவோமாக..........சுபம்.

பிரபஞ்ச அநுபவங்கள்.

1. இக்காலத்தில் முப்பது ரூபாய் சம்பாதிக்கிறவன் ஹோட்டலுக்குப் பத்து ரூபாயேனும் கொடுக்க அஞ்சுவதில்லை. அவன் மனைவி ஐம்பது ரூபாய்ச் சேலையை உடையாகக் கட்டவும் அஞ்சுவதில்லை. எவ்வண்ணமாகக் குடும்பம் முன்னேற்றம் பெறுவதோ?

2. தன் செலவில் பலருக்கும் தாராளமாய் நற்காரியங்கள் நடத்தும் ஒருவருக்குத் தமது சொந்தக்காரியம் ஏற்படும்போது கையில் இல்லாமற் போகிறது. முன் உதவி பெற்றுக்கொண்டவர்கள் அந்தச் சமயம் கண் ஜாடையாக மறைந்து கொள்ளுகிறார்கள்.

3. நம்முடைய தேசத்துச் சிறுவர் சிறுமியர் பலரும் மேல்நாட்டினரைப்போல நடையுடைகளையும் அநாசாரங்களையும் அநுஷ்டிக்க ப்ரவர்த்திக்கின்றனரேயன்றி, அவர்களைப்போலக் கல்வியும் அறிவும் நமக்கு வேண்டுமென்பதைக் கவனிப்பதில்லை.

4. அநேகர் தங்களுடைய கஷ்டங்களையே கொட்டியளக்கிறார்களேயன்றிப் பிறனுடைய கஷ்டத்தைக் கனவிலும் நினைப்பதில்லை. அதைப்பற்றிப் பேச்சே எடுப்பதில்லை விசாரிப்பதுமில்லை.

5. பத்து ரூபாய்ச் சம்பளக்காரனுக்கு அது அரிசிக்குப் போதாதே என்ற ஏக்கம். நூறு ரூபாய் ஸம்பாதிப்பவனுக்கு நல்ல உடைகள் வாங்க இது எம்மாத்திரம் என்ற கவலை. 500, 1000 ஸம்பாத்யமுள்ளவனுக்கு வேலையாட்களுக்கும் மோட்டார்ச் செலவுக் கட்கும் கௌரவ விநியோகங்களுக்கும் மிகவும் இழுப்பாயிருக்கிறதே யென்று யோசனை. ஆனால் இதில் எவரும் நாடகம், உல்லாசம் இவற்றை மறப்பதில்லை.

6. ஒருவர் தங்களை உள்ளன்புடன் நேசித்திருக்க, அவர்களுடைய அன்பு வேறொரு பக்கம் போகிறது. "வண்ணானுக்கு வண்ணாத்திமேல் ஆசை. வண்ணாத்திக்குக் கழுதைமேல் ஆசை. என்ன செய்கிற" தென்று இயம்பினார் ஒரு புலவர்.

7. எவ்வளவு தனம் இருப்பினும் அதற்கு மேற்பட்டவர்கள் பலர் இருக்கிறார்கள். எவ்வளவு கல்வி கற்பினும் அதற்கும் உயர்வாகக் கற்றவர்கள் உண்டு. எவ்வளவு நல்ல வம்சத்திற்கும் குறை கூறப் பல பெயருண்டு. இது உலகியல்பு.

8. லக்ஷக்கணக்காயுள்ள தனவந்தர்கள்தான் ஆயிரக்கணக்கில் வைரத் தோடுகள் அணிகிறார்கள். சாமான்யர்களும் தங்களின் முழு ஆஸ்தியையும் ஏன் வைரங்களில் போட வேண்டுமோ? அதற்குப் பதிலாக அநேகம் பொன்னாபரணங்களை அழகாய் அணிந்து கொள்ளக் கூடாதோ?

9. வீட்டு எஜமானர்கள் "அதற்கு இவ்வளவு செலவா? இது வீண் செலவு; அநாவசியம்" என்று பிறர் செலவுகளைக் கவனிக்கிறார்களே தவிர, தங்களுக்காக என்னென்ன வீண் செலவுகள் செய்யப்படுகின்றன வென்பதைக் கவனிப்பதில்லை. சுய காரியத்துக்கு வஞ்சனையில்லை போலும்!

10. மனக்கவலையுடன் நலிவோருக்கு நல்ல புஸ்தகங்களும் சிறு குழந்தைகளின் மொழிகளும் பொழுது போக்குக்கு மிக்க உதவியாயிருக்கும். உள்ளன்புடையோர் தரிசனமோ யாவற்றிலும் மேலானது.

ஜப்பானைப் பற்றிய சில விசேஷங்கள்.

ஜப்பான் தேசத்து ஸ்திரீகள் கருப்பு வஸ்திரமே தரிப்பது வழக்கம். அவர்கள் தலை மயிரையெல்லாம் சேர்த்து நடுத்தலையில் முடிந்து கொள்ளுவார்கள். அவர்களது கண்ணும் கருப்பு; தலை மயிரும் கருப்பு; உதடுகள் கோவைக்கனிபோலச் சிவந்திருக்கும்.

ஜப்பானியர் குடிப்பதில் பெருத்தவரல்லர். எனினும் பெருந்திண்டியுடையவர்கள். புசிக்க உட்கார்ந்து எழுந்திருப்பதென்றால் நாலைந்து மணி நேரங்கூடச் செல்வதுண்டு. நாலைந்து மணி யென்றால் அவ்வளவு நேரம் ஒரே நிலையாய்ப் புசிப்பதில்லை. நடுவில் அடிக்கடி எழுந்து சற்று நேரம் சுருட்டுப் பிடித்து விட்டு மறுபடியும் உட்கார்ந்து புசிக்க ஆரம்பிப்பார்கள்.

பூர்வத்தில் ஜப்பானிய அரசர் குடிகளுடைய கண்ணில் ஒரு போதும் தென்படுவதில்லை. அவர் தெய்வத் தன்மை பொருந்தியவரென்று மிகவும் மேலாகப் பூசித்து வைத்து, அவர் காலைக்கூடத் தரையில் வைக்க ஒட்டுவதில்லை. நாள் முழுதும் அவர் தம் சிங்காதனத்திலே வாயைத் திறவாது கை கால்களையும் அசைக்காது

பதுமைபோல உட்கார்ந்திருக்க வேண்டும். சிறிதளவு கைகால்களை அசைப்பாரானால், ஏதோ ஜனங்களுக்குப் பெரிய தீங்கு சம்பவிக்கப் போவதாக நினைத்துக் கொள்வார்கள். ஒருவன் தன் காலம் முழுதும் இவ்விதமாகவே வாழவேண்டுமென்றால் அவனது வாழ்நாள் அவனுக்கு எவ்வளவு இனிப்பாயிருக்குமோ நாமே யோசித்துத் தெரிந்து கொள்ளலாம்! அன்றியும் தினந்தோறும் பகலில் அரசர் தரித்திருக்கும் உடையை மாலைப் பொழுதானவுடனே தீயிவிட்டு எரித்து விடுவார்கள். மறுநாட் காலையில் வேறு உடைதான் உடுத்திக் கொள்ள வேண்டும். அரசன் உபயோகப் படுத்திக் கொள்ளுகிற தட்டு தாம்பாளங்களையும் இவ்விதமே செய்கின்றனர். முதல் நாள் உபயோக மானதை உடைத்து விட்டு மறுநாள் புதிதாய் ஒன்று கொள்ளவேண்டும். இப்பொழுது அந்த அரச ஸம்பிரதாயங்களில் பெரும் பான்மையும் மறைந்து போயிற்று.

1871—ம் வருஷத்தில் ரவில் போட ஆரம்பித்தனர். அதே வருடத்தில் தபால் ஏற்பாடும் தொடங்கியது.

1872—ம் வருஷத்தில் முதல் முதலாகப் பாலிகா பாடசாலையொன்று ஸ்தாபிக்கப் பட்டது. இப்போதோ?—

தேசத்தின் விருத்தி

துரைத்தனம் என்பது குடித்தனத்தினுடைய பிரதி சாயலேயாம். குடித்தனம் தாழ்ந்தும் துரைத்தனம் உயர்ந்தும் இருந்தால், அந்தக் குடித்தனம் துரைத்தனத்தைத் தன் மட்டத்திற்கு இறங்கும்படி இழுத்துக் கொள்ளாமலிராது. அவ்வாறே, குடித்தனம் உயர்ந்தும் துரைத்தனம் தாழ்ந்தும் இருந்தால், அந்தக் குடித்தனம் துரைத்தனத்தைத் தன் மட்டத்திற்கு ஏறும்படி இழுத்துக் கொள்ளும். ஒரு தேசத்து ஜன சமுதாய குணத்தின் பயன் அத்தேசத்தில் வழங்கும் அரசாக்ஷியிலும் சட்டங்களிலும் விளங்குவது இயற்கை. ஒரு தேசத்துக்கு நாணயம் பிறப்பதும், பலம் உண்டாவதும், முக்கியமாய் அங்குள்ள ஏற்பாடுகளாலல்ல குடிகளின் குணத்தாலேதான். இது ஸர்வாநுபவ சித்தமாய்த் தெரியும். தேசம் என்றால் என்ன? தேசத்தார் அனைவரையும் ஒருங்கே தொகுத்துச் சொல்வதுதான் தேசம்.

அப்படிப்போல நாகரிகம் என்றால் என்ன? தேசத்தில் உள்ள ஸ்திரீ புருஷ வாலிபர்கள் அவரவரே சீர்திருத்தம் பெறுவதுதான் நாகரிகம்.

தேசத்திலுள்ள அவரவர் முயற்சியும் ஊக்கமும் நேர்மையும் ஒன்றாகச் சேர்ந்து வரும் தொகை தேச விருத்தியாகும். அவரவர் சோம்புகையும், சுயநல ஒதுக்கமும், தீமையும் ஒன்றாகச் சேர்ந்து வரும் தொகையே தேசச் சிதைவு ஆகும். உலகத்தில் இன்னின்ன கெடுதிகள் தலைப்படுகின்றனவென்று நாம் சொல்வன வெல்லாம் பெரும்பாலும் மனுஷருடைய அக்கிரமத்தின் பயனாய் விளைந்தவைகளே. அக்கெடுதிகளுக்கு மூலம் அவரவர் நடையும் குணமுமாம். இவ்விரண்டையும் பற்றற மாற்றித் திருத்தினால்தான் அந்தக் கெடுதிகள் அடியோடே தொலையுமே தவிர, மற்றபடி நிவர்த்தி ஏற்படமாட்டா.

ஒரு தேசத்தின் ஜனங்கள் அடிமைகளா யிருக்கின்றனரென்றால், அடிமையாயிருப்பது தேகம் அல்ல. மனமேதான். மனதிற்கு உணர்ச்சி தோன்றி அது விழித்துக் கொள்ளின் அடிமைத் தன்மையும் சூரியன் முன் பனிபோல் மறைந்தொழியும். "அவனவன் ஸ்வாதீனத்தை நோறுங்கடிப்ப தெதுவும், அதற்கு யாது பெயர் வழங்கினும், கொடுங்கோலரசென்பதே அதன் பெயராகும்" என ஜான் ஸ்டுயர்ட் மில் என்ற வித்வான் கூறியுள்ளார். அவரவர் யோக்கியதையும் தன்தேசம் என்ற எண்ணமுமே சுதந்தரத்திற்கு உரமான ஊற்றுஸ்தானமும் அஸ்திவாரமும் ஆகவேண்டும்: மானம் வீரம் இருந்தால் ஊருக்கு அச்சம் இல்லை. மானிகள், வீரர்கள் குடிகொள்ளும் நாடு எவ்விதத்திலும் விருத்தி யடைந்துவிடும். ஒரு தீபத்தினின்றும் பல தீபங்கள் ஏற்றப்படுதல்போலத் தாழ்ந்திருக்கும் நாடொன்றில் ஒரு வீரன், மானி தோன்றினும் போதுமானது. அவன் ஒருவன் மூலமாகப் பலர் உற்பவித்து தேச விருத்தியை நாடி வெகு விரைவில் உயர்த்திவிடுவார்.

ஞான ரஞ்சனி.

சிவபிரான் எம்மிறை யென்று பெரியோர்கள் பரமேசுவரனையே தங்களின் இறைவனாக நிச்சயித்து ஸகல குறைகளையும் அவரிடம் தெரிவித்து ஸுகமடைகிறார்கள். கொடிய ராக்ஷஸனான இராவணன் கைலாஸமலையை அசைத்துப் பார்வதிதேவிக்குப் பீதியை விளைவித்தான். அதற்காக அப்பருவதத்தை எம்பெருமான் தமது இடற்காற் பெருவிரலினால் அமிழ்த்தினார். இராவணன் அடியில் அகப்பட்டு நசுங்கி எழுந்திருக்க முடியாமல் தவித்துப் பின்னர் ஸாமவேதகானத்தால் மகேசனைத் திருப்தி செய்து தன் விடுதலையையும் வேண்டிய வரங்களையும் பெற்றுக் கொண்டான். பரமதுஷ்டனாகிய அவனிடம் கிருபை கூர்ந்த பகவான் தமது பக்தர்களாகிய சுகுணஸாந்த சீலர்களை ஸம்ரக்ஷிப்பதில் பின்னடைவரோ? ஈச்வர கிருபைக்கு ஸமான மெதுவுண்டு? எமபயத்தைவிட வேறு பயமில்லை. அந்தப் பயத்தைப் போக்குவோமென்று திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் கால காலனையும், ஸர்வ பிராணிகளையும் இரக்ஷிக்கும் காரணமாக விஷத்தையுண்ட நீலகண்டனையும் தினந்தோறும் ஸ்தோத்திரம் செய்யக்கடவோம்.

***

முயற்சி திருவினையாக்கும்; பிரயத்நம் செய்வது பெரியோர்களின் இயற்கை. எவ்வித பிரயத்நம் செய்யத்தக்கது? தனக்கும் பிறருக்கும் நன்மையைப் பயக்கத்தக்க பிரயத்நமே செய்யவேண்டியது முக்கியமாகும். ஒவ்வொரு நாளும் ஈசுவரனை த்யானம் செய்து நல்ல அறிவும் ஞானமும் உண்டாகும்படி கோரவேண்டும்.

***

மனம்போல மாங்கல்யம் என்பது பழமொழி. நாம் எவ்விதம் மனதில் நினைக்கின்றோமோ அதற்கேற்றபடியே பலா பலன்களும் இருக்குமென்பது இதன் பொருள். கள், சாராயம் முதலிய பானங்களை யருந்தி, தன்னிலைமையை யறியாமல் கல்லிலும், மரத்திலும் முட்டிக்கொள்ளும் பேதையைப்போல், செல்வத்தாலும், மமதையாலும், துஷ்ட ஸகவாசத்தாலும் ஈசுவரனுடைய இருப்பை யறியாமல் மெய் மறந்து பாபகாரியங்களைச் செய்யும் வழக்கம் அசடர்களுக்குரியது. இளவயது முதல் ஆஸ்திக பக்தியைக் கற்பித்து வந்தால்,

பெரியவர்களானபின் எவ்வித கெட்ட எண்ணமும் வித்யாஸமான அபிப்பிராயமும் உண்டாகா. எது தியானிக்கப்படுகிறதோ அது ஸித்தியாவது ஸகஜம். குரங்கையே நினைத்துக் கொண்டிருப்பவன் குரங்குப் புத்தியையே யடைவான். முற்றும் துறந்த முனிவரொருவர் தமது அந்தியகாலத்தில் தாம் வளர்த்த மான் எதிரில் கலங்குவது நோக்கிக் கவலையிலாழ்ந்தார். மறுஜன்மத்தில் அவர் மானாகப் பிறக்க வேண்டியதாய் முடிந்தது. இப்படியே தியானத்தின் பயனாகிய மகிமையைச் சொல்லி முடியாது. தியானமே சிருஷ்டிக்கு ஹேது. நம்முடைய தியானம் எப்படியோ அப்படியே நாம் ஆகிவிடுகிறோம் என்பது விவேகிகளின் கொள்கை. இதற்காகத்தான் பகவந் நாமத்தை ஸதா சொல்லிக் கொண்டும், பகவானை எப்போதும் தியானித்துக் கொண்டும் காலங் கழிக்க வேண்டுமென்கிறோம்.

* * *

காடுஞ்செடியும் அவளாகத் தோன்றுதேன் கண்கட்கே என்று ஸ்ரீ ராமபிரான் சீதையைப் பிரிந்து துக்கித்தார். எங்கும் தோற்றும் ஸீதை கைக்கு அகப்படாமற் போனதேன்? உண்மையாகச் சீதையிருந்தாலன்றோ கையாற்பிடிக்கலாம். சீதாத்தியானமே எங்கும் சீதாவாகி, அவ்வுருவம் கண்கட்குப் புலனாகி, மீண்டும் மறைந்து, பின் மற்றோர் முறை தோன்றி அப்பால் அவ்வுருவு காணாமல், எட்டிப்பிடிக்கச்சென்று கைக்கு அகப்படாமல் இவ்வாறாக அடையும் அவஸ்தையானது உண்மையான பிரேமையைக் குறிப்பிடுவதாகும். பக்திமேலீட்டினால், பகவானைத் தேடிப்பிடிக்க முயன்று, எங்கோ இருப்பதுபோல் மனதிற்பட்டு, அங்குபோய்த் தேடியலைந்து ஏதுங்காணாது பிரலாபித்து உருவெளித் தோற்றமயக்கில் ஈடுபட்டுச் சோர்ந்துவிழும் பரவச நிலைமை உண்மையான பக்திக்கு அடையாளமாகும். இவ்விதமான பக்குவ நிலை பூர்வ ஜென்ம சுகிர்தத்தினாலேயே இப்பிறவியில் நமக்குத் தொடர வேண்டும்., இங்கிருந்துதான் ஞானம் என்பதும் உதயமாகின்றது.

* * *

பள்ளிக் கணக்குப் புள்ளிக்கு உதவாது என்பது பழமொழி. அதுபோல் ஒருவர் வேதாந்த சாஸ்திரத்தில் கரைகண்டிருக்கலாம். மிக்க மேதாவி யெனவும் கீர்த்திப் பிரதாபம் ஏற்கலாம். ஆனால் மனமுருகித் தியானித்துப் பரவசமுறும் ஒரு தனி நிலைமை இவ்விதப் புஸ்தகப் படிப்பினாலேயே சித்தித்து விடாது. யாவும் தெரிந்து

வைத்துள்ள அறிவின் உணர்ச்சி வேறு. பக்தி வலையிற்பட்டுப் பரவசமெய்தும் பரமானந்த நிலையின் பக்குவத் தன்மை வேறு. பரவச நிலைக்குப் பூர்வ ஜென்ம சுகிர்தம் இன்றி முடியாது. வேதாந்த சாஸ்திர பாராயணாதிகள் மனோ பக்குவத்திற்குத்தான் பயன்படுவனவேயன்றி ஜோதிர் மயமான ஞானத்தை யவை யுண்டாக்கா. ஒருவன் மிக்க ருசிகரமான பக்ஷணங்களை உண்பதாக வைத்துக் கொள்வோம். ஆனால் அவனுக்கு ஜலதோஷத்தால் மூக்கு வாஸனையே தெரியாமல் இருக்கின்றது. அத்தருணம் அவன் தான் உண்ணும் பக்ஷணங்களின் ருசிகரத்தை யறிவனா? அறியாதபோது உண்மையான இன்பானுபவத்தை யப்பக்ஷணங்களால் அவன் அடைந்தவனாகக் கருதப்படுதல் கூடுமா? அவ்விதமே ஒருவன் வேதாந்த சாஸ்திரங்களைக் கற்கலாம்; கற்றிருக்கலாம். ஆனால் ஞான நிலையெய்துகையும், பக்திப்பரவசத்தி லாழ்கையும் பெற்று விடுதல் சுலப சாத்தியமல்ல. அதற்கு ஈசனின் தனித்த ஒரு கருணை வேண்டும். இது கருதியே மாணிக்க வாசகரும் "அவனருளாலே அவன் தாள் வணங்கி" என்று பாடினார்.

* * *

உனைக்கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே என்றார் பெரியோர். மனம் அந்த ஒரே வஸ்துவினிடத்தில் சென்றிருந்து அதே தியானத்தில் ஆழ்ந்திருக்கையில், எதிர்ப்படும் ஏதும் கட்புலனுக்குத் தோற்றா. எங்கும் பகவத் ஸ்வரூபமாகவே படும். இந்நிலையில் வேறொன்றினைக் காண்பதேது? வேறு என ஒன்று தோன்றுவதுதான் ஏது? அவ்வாறான பக்குவ நிலைமை நமக்குச் சித்திக்குமாறு பகவானைப் பிரார்த்திக்கக் கடவோம்.

பொதுக் குறிப்புரை.

அன்புள்ள பாட்டியார் தமது பூர்வ வாணாட் செய்திகளைத் தமது பேரப்பிள்ளைகட்கு ஒரு கதை போன்றும் எடுத்துக் கூறி, குடும்ப சம்பந்தமான புராதன விஷயங்களில் அவர்களுக்கு ஞானம் உண்டாக வைத்து, நல்ல நல்ல அநுபவங்களையும், அவர்களின் நெஞ்சிலே பதியுமாறு செய்விக்கின்றார். அவ்விதம் கூறுவதில் பாட்டிக்கு ஒருவித உற்சாகம்; தமது பாடுகளை வெளியிட்டுக்

கொள்வதில்—அவருக்கு ஒருவித ஆறுதல்—மனோசமாதானம். அவ்விதம் அவர் பேசுங்காலையில் அவற்றை ஊன்றியுணரும் ஆற்றல் பேரப் பிள்ளைகளுக்கு அவ்வளவாக இல்லையாயினும்; தங்களது அறிவின் பக்குவத்திற் கேற்ப அவற்றினை ஸ்வீகரிக்கின்றார்கள். காலம் செல்லச்செல்ல, புத்தி தீக்ஷண்யம் அடையுந்தோறும் பாட்டியின் பொன்னுரைகள், இன்னும் விசேஷார்த்தங்கள் கொண்டதாய் உறவினர்தம் நாநாவிதமான மனோபாவங்களை விசாலமாய் விளக்குவதாய், பொதுவாக உலகத்தின் தன்மையையே சுட்டிக் காட்டுவதாய் அமிர்தமயமாக அவர்களின் கண் முன்பு நின்று ஜ்வலிக்கின்றன.

நூலாசிரியரும் ஒரு பாட்டிபோன்றவரேயாவர். பாட்டியின் ஸ்தானமும் அவரது கௌரவமும் சாமான்யமானதன்று. குடும்பத்துக்கே அவர் ஒரு ஊன்றுகோலாவர். ஒரு பெரிய ஆதரவும், பின்பலமும், ஸக்தியுமாவர். குடும்பத்தின் ஸர்வசக்தி தத்துவமும் அப்பாட்டியிடமிருந்து பிரதிபலிப்பதேயாகும். குடும்பத்தின் சூட்சமக்கயிறு பாட்டியிடமே யிருக்கின்றது. உலகத்தில் பரவியுள்ள பலவித அறிவுகளுக்கெல்லாம் ஆதியில் நூலாசிரியர்கள் தமது நூற்களின் வழியே யுணர்த்திய போதனைகளும் விளக்கங்களுமே மூல காரணங்களாம். அவற்றை இளமையின் போது பயிலுங் காலையில் அத்துணைத் தெளிவுடன் அவை இருந்திரா. பின் அறிவு முதிர முதிர அவற்றின் சுடரொளியினை மேன்மேலும் கிரஹித்து அவற்றால், தம்மகத்துள் பலவித ஊற்றுகள் ஊறிச் சுரந்திட உலக ஞானமும் கைவசமாகி உயர் வெய்துகின்றனர். இத்துணைக்குங் காரணமான நூலாசிரியர்களை உலகம் போற்றித் துதித்தல் கிரமமேயாகும். ஒரு நூல் எழுதப் புகுமிடத்துப் பல பாடுகளில்லாமல் அது முடிவுறுவதில்லை. அவற்றையெல்லாம் ஆசிரியர் சாரசங்கிரமாகத் தம் நூலகத்தே தெரிவிக்கும் ஒரு குறிப்புரைக்கே முகவுரையென்பர். இது பாட்டியார் தமது பூர்வ விஷயங்களைத் தமது பேரப்பிள்ளைகளுக்கு எடுத்துரைத்தல் போன்றதாம். இங்ஙனம் ஆசிரியர் முகவுரை வரைவதில் இரண்டு நோக்கங்கள் உண்டு. தாம் அந்நூல் இயற்றப் புகுந்ததில் பட்ட சிரமங்களை யெல்லாம் எடுத்துரைத்து அந்நூலின் அருமையினை வாசகர்கள் நன்கு உணருமாறு செய்விப்பது முதலாவது உத்தேசம். இரண்டாவதாக, நூல் இயற்றுவதிலுள்ள சூட்சுமங்களையும், அதன் தெளி பொருள் விளக்கங்களையும், பின்னுள்ளோரு முணர்ந்து, பிற்காலத்தில், அவர்களும் ஒரு நூல் வரைதற்கான சக்தியைப் பெறுமாறு செய்விக்க வேண்டுமென்பது மற்றொரு கருத்தாகும். இவ்விரு லக்ஷ்யங்களினின்றுமே முகவுரை என்பது உதயமாகின்றது.

ராம்மோகனன்.

கல்யாணபுரத்தின் ஜமீன்தார் கஸ்தூரி நாராயணன் ஸதா ஸ்திரீ சிந்தகன். உத்தமமான பார்வை அவனிடத்திலில்லை. அவனுக்கு ஏழு மனைவியர் இருந்தும், மற்றொரு நங்கையும் போகஸ்திரீயாக அமர்ந்திருந்தாள். அவள் அதிசுந்தர வனிதை. எனினும் மாங்கல்யம் இழந்த மாது. அவளுடைய சோபாகாந்திமயமான ரூபலாவண்ய ராசிகளால் அப்போதுதான் பருவபக்குவமுற்ற யுவதிபோன்றும் விளங்கினாள். அவளுக்கு ஒரு தங்கையும் உண்டு. இவள் போகஸ்திரீயாக அமர்ந்திருப்பதை எவரும் அறியார். வெளிக்கு ஸகோதர உறவின் முறைகொண்டு ஸஞ்சரித்தனர். உள்ளுக்கு இன்பம் பொங்கிநின்றனர். கஸ்தூரி நாராயணன் தனது போக ஸ்திரீயின் ஸகோதரியையும் மணமாட மனதானான். ஜமீன்தார் நினைத்தால் முடியாததுண்டா? அவ்விதமே விவாகமும் நடந்தேறிற்று. விவாகத்திற்கு வந்தவர்களுள் ராம்மோகனன் என்ற மிட்டாதாரும் ஒருவன். அவன் கஸ்தூரி நாராயணனுக்குக் கப்பம் கட்டுபவனாய் அவனது அதிகாரத்தின் கீழ் காஞ்சீபுரத்தில் வசித்துவந்தான். துன்மார்க்கர்களை வெளியில் இழுத்து அவமானப்படுத்துவதில் வெகு தீரன். விவாகத்துக்கு வந்திருந்த சமயம் கஸ்தூரி நாராயணனின் அறையை அலங்கரிக்கும் வேலை இவனுக்கு ஏற்பட்டது. அங்கிருந்த சாமான்கள் அனைத்தையும் அப்புறப்படுத்திச் சுத்தம் செய்கையில் ஒரு பழங்கடிதக்கட்டு அவன் கண்ணெதிர்ப் பட்டது. மிகு சிரத்தையுடனும் பிரித்து வாசித்தான். போகஸ்திரீ கஸ்தூரி நாராயணனுக்கு எழுதிய காதற் கடிதங்களாக அவையனைத்தும் இருந்தன. அப்போதுதான் கஸ்தூரி நாராயணனது துன்மார்க்கத்தை அவன் கண்டறிந்து பிரமிப்பதானான். தான் போகஸ்திரீயாக வைத்துக் கொண்டிருப்பவளுடைய தங்கையையே மணந்து கொண்ட விநோதத்தை வெளியில் இழுத்துவிட எண்ணினான். நினைத்தபடி முடிக்கும் ஆற்றல் ராம்மோகனனுக்கு வெகு விசேஷம். அவன் அக்காதற் கடிதங்களைப் பலருக்கும் காட்டிவிடவே ஊரெங்கும் பரவிவிட்டது. கஸ்தூரி நாராயணனுக்கும் இது எட்

டிற்று. கனத்த கோபம் கொண்டான். தான் செய்தது தவறே எனினும், அது தனக்குத் தப்பிதமாய்த் தோற்றாமல், அதைப் பிறனொருவன் எடுத்துத் தூற்றுகையில், அதுமட்டும் பெருங்குற்றமாக நினைத்துப் பழிக்குப் பழிவாங்க நினைப்பது சிலரது வழக்கம். அதில் கஸ்தூரி நாராயணனே கொலைக்கஞ்சாப் பாவி. பாவிமனிதன், பாவி மனிதன் என்று பிறரைத் தூற்றிவிட்டு, உள் அந்தரங்கத்திலோ முற்றிலும் பாபாத்மாவாகவே பயங்கரமாய்க் காணப்படுவான். உயிரையும் கற்பையும் உருக்குலைய வைப்பதில் அவனுக்கு வெகு உத்ஸாகம். மீசையை முறுக்கினான். ராம்மோகனனைக் கெடுக்கும் வேலையைத் தொடங்கிக்கொண்டான். அவன் குறி பிசகாது. அவன் அம்பு தப்பாது. ஒருவர்மீது ஒரு பகை வைத்துவிட்டால் கடைசி வரை சாதித்தே தீருவான். ஸர்வநாசம் செய்வதில் சதுரன். தான் செய்தது மானக்கேடான காரியம் என்று மட்டும் அவனுக்குத் தோற்றவில்லை. ராம்மோகனன் சிறுபிள்ளைத்தனமாய் வெளிப்படுத்தியதற்கு அவனை மன்னிக்கும்படி பலர் வேண்டியும் அவன் இசையவில்லை. தன் கையின் கீழ் இருப்பவனுக்கு இத்தனைத் துணிவா என்று ஆக்கிரகம் மிருந்தவனானான். ராம்மோகனனையும் அவனது நிலம் சொத்துக்களையும் கெடுத்துவிடத் தன்னால் கூடியவளவும் முயன்று வந்தான்.

இதை ராம்மோகனன் அறிந்து, இனி நாம் இங்கிருந்தால் உயிர் பிழைப்பது கஷ்டம் என்று தெரிந்து கொண்டான். ஒருவனுக்குக் கோப வேளையாக இருக்கும்போது அவனருகிலில்லாமல் தூர மறைந்திருப்பது நன்று என்பதை அநுபவபூர்வமாகக் கண்டவனாதலால் இச்சமயம் தான் வெளிநாடுகளுக்குச் சென்றுவிடுவதே மேலென நினைத்தான். தன்மேல் பிறருக்கு விரோதமுண்டாகி விட்டபோது தான் அவர்களை விட்டுப் பிரிந்திருப்பதே பகைமையைச் சமனப்படுத்துதற்குத் தகுந்த பாதையாகும். எனவே, தனது காரிய நிர்வாகியிடத்தில் தனது பூஸ்திதிகளைப் பரிபாலனம் செய்யுமாறு ஸகல ஏற்பாடுகளையும் செய்துவிட்டு, தான் கஸ்தூரி நாராயணனின் கோப உக்கிரகம் தீருமளவும் காஞ்சிபுரத்தின் எல்லையை மிதிப்பதே யில்லையென்று தனது காரியநிர்வாகியினிடம் தெரிவித்துவிட்டுத் தேச ஸஞ்சாரமாய்ப் புறப்பட்டுப் போனான்.

இவன் தேசஸஞ்சாரம் செய்யத்தொடங்கி முதல் முதல் மதுரை மாநகரத்திற்குப் போய்ச் சேர்ந்தான். அங்கும் அதைச் சமீபித்த

இராமநாதபுரம் ஜமீனிலும் வெகுநாட்களாய் மழை இல்லாமற் போகவே, மாரியல்லது காரியமில்லை என்பதுபோல, அந்தப் பிரதேசம் முழுமையும் பஞ்சத்தால் துன்பப்பட்டுக் கொண்டிருந்தது. இதனை ஏற்கனவே ராம்மோகனன் கேள்வியுற்றிருந்தானாதலால், பஞ்சத்தால் வருந்தும் பிரஜைகளைக் காப்பாற்ற வேண்டுமென்ற இரக்கசித்தமிருந்தவனாய்க் காஞ்சிபுரத்திலிருந்தும் வேண்டிய தான்யங்களையும் மற்றும் பலவற்றையும் தருவித்து பஞ்சத்தை நிவர்த்திசெய்ய முயன்றான். இவன் அங்கேபோய்ச் சேரும் காலமானது பஞ்சத்தின் கொடுமையைப் பொறுக்கமாட்டாமல் ஜனங்கள் சாகுங்காலமா யிருந்தது. அவர்களின் உயிரைக் காப்பாற்றுவதற்கான தான்ய ராசிகளுடன் இவன் அங்கு பிராப்தமாகவே, ஈச்வரனேதான் மனமிரங்கிப் பஞ்சத்தால் வருந்தும் மனிதர்களை ரக்ஷிக்கும்பொருட்டு ராம்மோகனனை யனுப்பினாரோவென்று அந்த ஊரார் அனைவரும் கருதுவாராயினர். அந்த இராமநாதபுரத்தின் ஜமீன் கிருஷ்ணதேவன் ராம்மோகனனின் குணசீலங்களுக்கு வியந்தவனாகி அவனிடத்தில் அத்யந்த அன்புபாராட்டினான். தனது புரஜனங்களைக் காப்பாற்ற வந்த தெய்வமாக ராம்மோகனனை எண்ணினான். இப்படியாக ராம்மோகனன் கிருஷ்ணதேவனிடத்தில் சுகமாகச் சிலநாட்கள் வரை தாமதித்துக் கொண்டிருக்கையில், இவனுடைய காரிய நிர்வாகியிடமிருந்து இவனுக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் இவன் இங்கிருப்பது கஸ்தூரி நாராயணனுக்குத் தெரிந்துவிட்டதாயும், சீக்கிரத்தில் இராமநாதபுரம் ஜமீனைவிட்டுப் போகாவிடில் அவன் ரகசியத்தில் கொலையாளிகளை யனுப்பிக் கொன்றுவிடுவானென்றும், அதுவும் கூடாதபோது கோள் சொல்லிக் கிருஷ்ணதேவனுக்கும் ராம்மோகனனுக்கும் ஆகாதபடிக் கடிதங்கள் அனுப்பி, இருவருக்கும் இடையே பெரும்பிளவை யுண்டாக்கி மித்திரபேதம் செய்யத் தலைப்படுவானென்றும் இந்தச் சண்டாளத்துவங்களில் அவன் மிகவும் வெகுகால அநுபவம் வாய்ந்தவனென்றும் கண்டிருந்தது. அதைப் பார்த்ததும் அவ்வூராரிடமும் கிருஷ்ணதேவனிடமும் விடைபெற்றுக்கொண்டு இராமேஸ்வரம் வந்து அங்கிருந்தபடியே கப்பல் ஏறிச் சென்றான்.

சிலநாட்கள் வரையில் கப்பல் பிரயாணம் சுகமாகவே நடந்து கொண்டிருந்தது. காசிக்குப் போனாலும் கர்மம் தொலைய வில்லையே யென்பது போல இங்கும் ராம்மோகனன் விபத்துக்காளானான். உடு

இல் ஒருவருக்கு ஒரு துன்பம் நேர்ந்துவிடில் அதைத் தொடர்ந்து ஸதா சோதனைகள் நேருவது ஸகஜம். அதுபோலச் சின்னாட்களுக்குப் பின்பு கடலில் ஒரு பெரும்புசல் அடித்து இவன் ஏறிச்சென்ற கப்பலை யுடைத்துவிட்டது. அனைவரும் நடுச்சமுத்திரத்தில் அமிழ்ந்து மடிவதாயினர். ராம்மோகனன் மட்டும் இன்னும் பட வேண்டிய கஷ்டங்கள் பாக்கி யிருந்ததினாலே கடவுள் தனக்கு அளித்த ஆயுள் மிகுதியினால் அலைகடலில் ஆவியிழந்திடாமல் எவ்விதமோ நீந்தித் தடுமாறிக் கொண்டே கௌபீனங்கூட இல்லாதவனாக ஒரு தீவில் கரையேறினான். அகதிக்குத் தெய்வம் துணையல்லவா? அங்கு இவனையோர் வலைஞன் கண்டு தன் வீட்டிற்கு இட்டுக்கொண்டு சென்று உடை முதலியவைகள் கொடுத்து உபசரித்துத் தன் வீட்டிலேயே யிருக்கும்படி கேட்டுக்கொண்டான். கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்ட சிலருக்குக் கஷ்ட காலங்களை சதா வந்துற்ற போதிலும் அவர்கள் எங்கு சென்றாலும் கௌரவிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப் படுகை ஓர் அபூர்வ அதிசய சம்பவமாகும். அது கடவுளின் அருட்டிறத்தை விளக்குவதுமாகும். இங்ஙனமாக ராம்மோகனன் கரையேறின தேசத்திற்கு இலங்கைநாடு என்று பெயர். அந்த இலங்கைத் தீவில் வாமனமூர்த்தி என்ற ஒரு லக்ஷப்பிரபு வாழ்ந்து கொண்டிருந்தார். அவர் மகா பரோபகாரியாவர். இரவில் மாறு வேடம் புனைந்து ஏழைகளின் இல்லங்கட்குச் சென்று அவர்களுடைய சுக துக்கங்களில் கலந்து அவற்றையெல்லாம் விசாரித்துத் தம்மாலான மானிட சக்தியில் இயன்ற உதவிகள் யாவும் செய்வார். இவரை இன்னாரென்று எவரும் கண்டுகொண்டதில்லை. மிகவும் நற்குணமுள்ளவரும் தம்மை யடுத்தவர்களைக் காப்பாற்றுவதில் கவலை யுடையவருமாக இருந்தார். அவருக்கு அதிரூப ஸம்பன்னையான பானுமதி யென்னும் ஒரு குமாரத்தி யிருந்தாள். அவளுடைய பிறந்த நாள் இரண்டொரு தினத்தில் வரப்போகிறதென்றும் அப்பொழுது கல்வியிலும் தேக வலிமையிலும் சிறந்தவர்களான பிரபு குல குமாரர்கள் பலர் பிரபுவின் முன்னிலையில் மல்லயுத்தம் செய்வார்களென்றும் அதில் எவன் அனைவரையும் ஜெயிக்கின்றானோ அவனுக்கு அவளை வாழ்க்கைத் துணையாக விவாகம் செய்து கொடுக்கப் போகிறார்களென்றும், கல்வியின் பலத்தோடு, தேகவலிமையும் பிரதான மென்பது பிரபுவின் கருத்தென்றும் வலைஞன் கூறினான்.

ராம்மோகனனுக்கு இது கேட்கவும் மிக்க ஆவல் உண்டாயிற்று. அவனுக்கு இன்னும் விவாகம் நடக்கவில்லை. அதன் சுவை நயங்கள் இன்னவாறு இருக்குமென்பதைக் கண்டறிய அவனுக்கு நெடுநாள் அவா. தன்மீது பரமசுந்தராங்கனையான ஒரு மனோன்மணி காதல் கொள்வதும், தன் ஜீவகாலமுற்றும் தன்னைப் பிரியாதிருந்து கஷ்டசுகலாப நஷ்டங்கள் பங்குபெறுவதும், தனது வமிசவிருத்திக்காக மக்களை யீன்று மங்களம் செய்வதும்—இன்னோரன்ன இன்பானுபவங்கள் எவ்வெவ்வாறு இருக்குமோ—நூல்களிற் காணுமாறு உயர்நலமுற்று ஓங்குமோ—அதனை ஸ்வானுபவ பூர்வமாகக் கண்டறிய வேண்டுமென்று நெடுநாளாக விரும்பி அதற்கான காலத்தை எதிர்நோக்கியிருந்தான். அந்த ஸ்திதியில் இந்தச் செய்தியை வலைஞன் கூறவும் மிக்க உத்ஸாகிதனானான்; எனினும் அவனது விலையேறப் பெற்ற யுத்தகவசமானது ஸமுத்திரத்தில் விழுந்துவிட்டது. ஜலத்தில் மிதக்கக்கூடிய பெட்டியொன்றில் அதை வைத்திருந்தான். கப்பல் உடைந்தபோது அப்பெட்டியும் ஸமுத்திரவசமாயிற்று. அக்கவசம் இருப்பின் நாமும் நாளை அங்கு போகலாமே என்று துக்கித்தான். ராம்மோகனின் தந்தையார் தமது அந்தியகாலத்தில் தமது குமாரனுக்கு அவனது அங்க சம்ரக்ஷகமாக அக்கவசத்தைக் கொடுத்து எப்போதும் அதைவிட்டுப் பிரியாதிருக்குமாறு ஆக்ஞையிட்டிருந்தார். அக்கவசம் முற்றிலும் ஒருவித காந்தத்தால் ஆக்கப் பெற்றதாகும். அதைக் கடந்து தேகத்துள் எதுவும் சென்று தாக்காது. அதை யணிந்ததும் ஒருவிதமான சுறுசுறுப்பும் ஒரு புது ஊக்கமும் தன்னில்தானே எழும். அதற்கான தாதுப் பொருள்களுடன் கலக்கப்பட்டு ஆன ஒருவித உலோகத்தில் அது செய்யப்பட்டிருந்தது. சாதாரணமாகவே நாம் பாதரக்ஷையணிந்து நடக்கும் நடை எத்தனை கதியுள்ளதாய் இருக்கின்றது? வெற்றுக் காலுடன் நடக்கும் நடைக்கும் அதற்கும் எத்துணைப் பேதம்? இவ்விதமே சிறந்த ஆடைகள் அணிந்து நடந்துசெல்லும் ஊக்கமும் வேகமும் மலிவான வஸ்திரம் தரித்துச் செல்லுகையில் எழுகின்றதோ? இவையெல்லாம் இயற்கையுடன் கலந்த பரிணமிப்புகளேயன்றித் தேவவசியமேதும் இதில் இல்லை. ராம்மோகனன் தனது தந்தையார் ஈந்த கவசத்தை அவரது ஞாபகப் பொருளாய்ப் பாராட்டிச் சீராட்டித் தனது தந்தையை நேரிற் காண்பதுபோலவே அதைப் பாவித்து நேசித்து நின்றான்.

அத்தகைய க்வசம் ஸமுத்திரத்தில் வீழ்ந்துபோனதும், அது இல்லாததால் தான் பிரபுவின் சபைக்குச் செல்ல இயலாதிருப்பதும் நினைக்க நினைக்க உள்ளங் கொதித்து மிகமிக உருகுவதானான். இங்ஙனம் நிகழ்கையில் இவனை ஆதரித்த வலைஞன் மச்சங்கள் கொணர்கைக்காக நடுக்கடலுக்குச் சென்றபோது பெட்டியொன்று மிதந்துகொண்டிருப்பதைக் கண்டான். அதைப் பத்திரமாய்த் தனது வீட்டிற்குக் கொணர்ந்து திறந்து அதனுள்ளிருந்த ஆயிரம் பவுன்களையும் விலையேறப்பெற்ற கவசத்தையும் நோக்கி ராம்மோகனனுக்கு இவ்விஷயத்தைத் தெரிவிக்கவே, தனது கவசமே தன்னிடம் சேர்ந்தது நோக்கிக் கடவுளை வாழ்த்தினான். பரலோகத்திலுள்ள தன் தந்தை இன்னும் தன்னில் அன்புகூர்ந்திருப்பதாகவே நினைத்து அவரைத் துதித்தான். ஆநந்தக் கண்ணீர் பெருகியவனாய் ஸாகரமே தன்மீது அன்புகூர்ந்து மனமிரங்கித் தன் கவசத்தைத் திருப்பிக் கொடுத்ததென்று புளகிதமுற்றான். எப்படி என் கவசம் திரும்பிவந்ததோ, அதுபோலவே என் பாக்கியமும் திரும்பி வருமென்றும் எண்ணி அவன் மனமகிழலானான்.

மறுதினம் பானுமதி பிறந்த நாள். இலங்கையிலுள்ள பிரபுகுல வம்சத்தினரும் அவர்களின் குமாரர்களும் விஜயமாகி ஸபையை அலங்கரித்தனர். பானுமதியின் ஒப்பற்ற வித்தியா வைபவத்திற்கும் குணாதிசயங்கட்கும் வசமாகி அவளை மணக்க விரும்பிய பிரபுகுலச் செல்வர்கள் தங்களின் மல்ல யுத்தத் திறனைக் காட்டக் கூடியிருந்தனர். அவர்களுடன் ராம்மோகனனும் போர்புரிந்து அதிசுலபத்தில் தானே அனைவர்மீதும் வெற்றிகொண்டான். இவ்விதமாக ஜயிக்கின்றவனுக்குப் பானுமதி தக்க மரியாதை பண்ணவேண்டுமாகையால் அவள் அங்கு வந்து அவன் கழுத்தில் அழகிய பூமாலையைச் சூட்டினாள். அவளது அழகு தான் காதினால் கேட்டதைவிட அதிகமாகவே இருந்ததால், ராம்மோகனன் அவள்மீது அதிக விருப்பங் கொண்டு மிக்க விசுவாச உள்ளத்தினனாய், தனக்கு அப்பாக்கியம் லபிக்கச்செய்த பகவானை நோக்கித் துதித்தான்.

வாமனப்பிரபு தமது மாப்பிள்ளையாகிய ராம்மோகனனின் வீரத்தைக் கண்டு மகிழ்ந்து, அவனது வணக்கம், ஒழுக்கம், மரியாதை இவைகளுக்கு அவனை மிகவும் மெச்சினான். குல கோத்திரங்களைத் தனது மாமனார் விசாரிக்கும்பொழுது, உண்மையைச் சொல்லிவிட்

டால் தான் அங்கு இருப்பது எவ்விதமேனும் கஸ்தூரி நாராயணனுக்குத் தெரிந்து விடுமென்று அச்சமுற்று யதார்த்தத்தை உரைக்காமலே, தான் சாதாரண மனிதன் என்று தன்னைப் பற்றிக் கூறிக்கொண்டான். ஆயினும் சாதாரண மனிதன்தானே யென்று வாமனப்பிரபு தன் மருமகனிடம் விசுவாசத்தையாவது மரியாதையையாவது குறைக்கவில்லை. மிக்க வைபவமாய் விவாகத்தையும் நடத்தி வைத்தான். அன்று முதல் பானுமதியுடன் கூடிக் குலவிக்கொண்டு ராம்மோகனன் தன்னை எவரும் இன்னாரென்று கண்டுகொள்ள இயலாவாறு அந்த இலங்கைத் தீவிலேயே வசித்து மிகவும் மனோகரமாயிருந்து வந்தான். ராம்மோகனன் இராஜபோகத்தில் தனது நாட்டில் இருக்கையில் விவாகம் நிகழக்கூடாதா? அனாதையாக நின்றிருக்கும் இத்தருணத்தில்தானா திருமணம் கைகூடப் பெற வேண்டும்? எதற்கும் வேளை முக்கியம். அது நேர்ந்த போதுதான் காரியம் கனியும்.

***

போங்காலத்தில் யாவும் போம்; வருங்காலந்தன்னில் வாராததுகூட வந்துவிடும். ராம்மோகனனுக்கு இது அதிர்ஷ்ட காலம். விவாக பாக்கியமும் கூடிற்று. ஜெகன்மோகினியான ரூபாவதி மனைவியாக வாய்த்தாள். இத்தருணத்தில் மற்றொரு கடிதமும் அவன் கைவரப் பெற்றான். அது அவனது காரியநிர்வாகியின் ஸ்வஹஸ்தலிகிதமாயிருந்தது. அதனில் கஸ்தூரி நாராயணன் காலமடைந்ததாகவும், விரைவில் ஜன்ம பூமியுற்று ஸர்வ சொத்துக்களையும் கைக்கொண்டு யதாப்பிரகாரம் பாலனம் செய்யுமாறும் வேண்டியிருந்தது. இப்பொழுதுதான் வாமனப் பிரபுவுக்குத் தனது மருமகன் ஏழையன்றென்றும், தன்னைப்போல் உயர்ந்த வம்சத்தில் பிறந்தவனென்றும் அதனோடு நற்குண நற்செய்கைகளுக்குப் பெயர் பெற்றவனென்றும் தெரிய வந்தது. முன்னம் இவன் ஸாதாரண மனிதன் என்று எண்ணியிருக்கும் பொழுதே சந்தோஷித்து வந்த வாமனப் பிரபுவுக்கு இப்பொழுது இவனிடத்தில் உண்டான ஆநந்தத்தைச் சொல்லவேண்டுமோ? ஆனால் தனது அருமை மருமகனும் மகளும் சீக்கிரம் தங்கள் தேசத்தைவிட்டு இந்தியாவுக்குப் போய்விடுவார்களென்பதை யெண்ணிப் பார்க்கும்பொழுது, ராம்மோகனன் ஸாதாரண மனிதனாயிருந்தாலும் நலமாயிருக்

என்று மாமனார் எண்ணவேண்டியதாயிற்று. மேலும் பானுமதி அப்பொழுது 7, 8—மாத கர்ப்பிணியாகவும் இருந்தாள். வாமனப் பிரபு தனது மருமகனைப் பார்த்து, பெண்ணைப் பிரஸவகாலம் வரையில் அங்கு விட்டுப் போகும்படி கேட்டுக்கொள்ள அவனும் அதற்கு ஒப்பினான். எனினும் பானுமதி தன் நாதனின் பிரிவைச் சகிக்கலாற்றாது தானும் அவனுடனேயே செல்லவேண்டுமென்று பிரியப்பட்டிருந்தாள். தன் குமாரத்தியின் விருப்பத்திற்கு விரோதமாய் நடக்க வாமனப் பிரபுவுக்கு மனம் ஒப்பவில்லை. அவள் தன் கணவனின் இல்லத்தைக் கிட்டிய பின்னர்தான் பிரஸவிக்க நேருமென்றும் எண்ணிக்கொண்டிருந்தாள். தன் குமாரத்தியின் அபீஷ்டத்தைத் தடைசெய்யாமல் வாமனப் பிரபுவும் அவளை ராம்மோகனனோடு பிரயாணப்படுத்தி அனுப்பிவிட்டார். பெண்ணைப் பெற்றவர்களின் வாழ்வு இவ்வளவுதான். எந்த நாளிலும் பிரிவுதான், துன்பம் தான். ஆனால் அனைவரும் ஆண்மக்களையே பெறுவதாயின், பின் பெண்மக்களுக்கு என் செய்வது? இது நிற்க, கப்பல் ஏறிக் கடலிற் போய்க் கொண்டிருக்கையில், ராம்மோகனன்மீது ஏற்கனவே கடுஞ்சினமுற்றிருந்த ஸமுத்திரமானது சிலநாள் அடங்கியிருந்து மீண்டும் கோபம் கொண்டதுபோல, ஒரு பிரசண்டமாருதம் அடித்தது. அந்தச் சமயத்தில் பானுமதிக்குத் திடீரென்று பிரஸவ வேதனையுண்டாகி ஒரு பெண் குழந்தையைப் பெற்றுவிட்டுக் கண்ணை மூடிக்கொண்டாள். அவளுடன் கூடவந்த தாதியாகிய பார்வதி என்பவள் பிறந்த குழந்தையைக் கையில் எடுத்துக்கொண்டு ராம்மோகனனிடம் வந்து, "உங்களுடைய பாக்கியம் இவ்வளவுதான். உயிருக்குயிரான உங்களுடைய உத்தம மனையாள் இந்தச் சிசுவை யீன்று, தனக்குப்பிரதியாக இதைப் பார்த்துக்கொண்டிருக்க உங்களுக்குத் திட்டம் செய்துவிட்டு மாண்டாள்" என்று புலம்பினாள். இந்த வர்த்தமானம் ராம்மோகனனின் செவியில் இடிவிழுந்ததுபோல் பட்டு மூர்ச்சையடைந்தான். பிறகு எழுந்து "தெய்வமே! நீ நல்ல வஸ்துக்களை முதல் முதல் கொடுப்பானேன், பிறகு பொறுதவாறு அவற்றைப் பிடுங்கிக் கொள்வானேன்?" என்று பலவாறு புலம்பியழுதான். அழுதாற் பயனென்ன? நொந்தாற் பயனென்ன?—ஆவதில்லை. பார்வதியும் அவனைத் தேற்றலைப்பாளானாள். "இனி வியஸனப்படுவதில் என்ன பயன்? எதன் [illegible] அளவுகடந்த நம்பிக்கையையும் அவா[illegible]யும் செலுத்தினோமோ

அதன்மீதே கடவுளுடைய கோபத்தின் பாணம் பாய்கிறது. மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு சுவாமி கொடுத்திருக்கும் இந்தக் குழந்தையைப் பார்த்துப் போனதை மறக்கவேண்டும்" என்று சொல்லிக் குழந்தையை ராம்மோகனனின் கையில் கொடுக்க, அவன் அதை ஆசையுடனும் வாங்கிக்கொண்டு அந்தப் பச்சை இளங்குழந்தையைப் பார்த்து "உன்னைப்போல் இவ்வளவு துர்ப்பாக்கியத்துடன் குழந்தைகள் இந்த உலகத்தில் பிறந்தது முண்டோ? என் குழந்தாய்! நீ பிரபுவின் வமிசத்தில் பிறந்திருந்த போதிலும் உன் கதி இப்படியாயிற்றே. ஆனால் உன் வாழ்நாட்களாவது நன்றாய் இருக்க வேண்டும். என்னதான் நீ க்ஷேமமாக வாழ்ந்த போதிலும், அதைப் பார்த்துச் சந்தோஷிக்க இனி உன் இனிய தாயார் இவ்வுலகத்திற்கு வரப்போகிறாளா?" என்று சொல்லித் துக்கப்பட்டுக் கோவென்று புலம்பினான். மிகு விருப்பமாய் எதிர் நோக்கிய விவாக சுகமும் தனது மனைவி கர்ப்பவதியானாளென்ற பூரிப்பும் முடிவில் எவ்வாறானது கண்டீர்களா?

அடிக்கடி கடலில் அலைகள் எழும்பிப் புசலும் அதிகரித்துக் கொண்டே வந்தது. கப்பல்களிலே பிணங்கள் இருந்தால் அவை கடலில் எறியப்படுகிற வரையில் புசலும் அடங்கமாட்டாதென்று மாலுமிகளுக்குள் ஒரு அபிப்பிராயம் உண்டு. புசல் பின்னும் அதிகரிக்கவே அவர்கள், பானுமதி ராம்மோகனனின் மனைவியாயிற்றே என்பதைக்கூட யோசியாமல் அவனிடம் வந்து இந்த க்ஷணமே சவத்தை ஸமுத்திரத்திலே தள்ளிவிட வேண்டும்; இல்லையேல் புசலும் நிற்காது; கப்பலும் மூழ்கிவிடும் என்றார்கள். ராம்மோகனனுக்கு இது தப்பான அபிப்பிராயம் என்று புலப்பட்ட தானாலும், கடலின் நடுவில் மாலுமிகளின் அதிகாரந்தான் அதிகமாகையால், அவர்கள் கூறியதைத் தடுக்கக் கூடாமல் அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டான். ராம்மோகனன் ஏற்கெனவே கடலில் விழுந்து புண்பட்டவனாதலால் அத்யத்புதமான மிதக்கும் பெட்டியொன்றைத் தன்னுடன் கொணர்ந்திருந்தான். அது ஒரு படகுபோன்றும் இருந்தது. முற்றிலும் அது ரப்பரினால் செய்யப்பட்டு, ஒருவித திராவகத்தினால் அந்த ரப்பரை ஸமுத்திர ஜந்துக்கள் கெடுத்துவிடா வண்ணம் கெட்டிப்படுத்தி யிருந்தது. உள்ளுக்குக் காற்று வரவும் போகவும் அதி சூக்ஷ்மமான குழாய்கள் மூலம் துவாரங்களுடன் அமைக்கப்

பட்டிருந்தது. அதில் மூவர் தாராளமாய் ஒரு மாதம் தங்குவதற்கான வசதிகளுடனும் கூடியதாயிருந்தது. ஆகாரத்திற்கு மட்டும் பால் டப்பிகள் வைக்கப்பட்டிருந்தன. வேறு சில கனமில்லாத தின்பண்டங்களும் அதில் இருந்தன. இத்தகைய விசித்திரமான ரப்பர் பெட்டியில் மகமல் முதலிய பட்டு வஸ்திரங்களைப் பரப்பி, புனுகு, ஜவ்வாது முதலான வாஸனைத்திரவியங்களைக் கொட்டி, தனது பிராணப் பிரியையான பெண்மணியின் தேகத்தை ஆடை ஆபரணங்களுடன் அதற்குள் வைத்து, அவள் இன்னாளென்றும், யாராவது அவளை யொருகால் பெட்டியுடன் கண்டெடுத்தால் தயைசெய்து அடக்கம் செய்ய வேண்டுமென்றும், ஒரு கடிதமும் வரைந்து பெட்டியில் வைத்து அப்பெட்டியை ஆவிசோரக் கதறியவண்ணமாய் ஸமுத்திரத்தில் மெதுவாக விட்டுவிட்டான். இது இவ்விதம் முடிந்ததும் கடலில் புயல்காற்று சற்றே தணிய ஆரம்பித்தது. ராம்மோகனன் தனது இளங்குழந்தை பிழைத்திருக்குமோ மாட்டாதோ வென்ற கவலையுற்றவனாய் அல்லும் பகலும் அதைப் பராமரித்தவாறே இருந்தான். இவ்வுலக பாசங்கள் யாவற்றினும் புத்திரபாசம் ஒன்று மனத்தை அதிகமாகக் கவரவல்லது. கப்பலும் சாந்தமாய் இராமேஸ்வரத்தின் பக்கமாய் நெருங்கிக்கொண்டிருந்தது.

***

இவ்விதமாகப் பானுமதியானவள் பெட்டியுடன் ஸமுத்திரத்தில் தள்ளப்பட்ட காலம் இராக்காலமாயிருந்தது. அந்தப் பெட்டி விழுந்த இடம் புஷ்பபுரி என்னும் நகரத்திற்குச் சமீபமாக இருந்தது. அந்த ஊரில் மகா யோகி என்றொரு வைத்தியர் இருந்தார். அவர் மறுநாட் காலையில் சமுத்திரக் கரையில் உலாவப்போன பொழுது அங்கு ஒரு நாளுங் காணாத பெட்டி ஒன்று ஒதுங்கி யிருப்பதைக் கண்டு தன் வேலைக்காரர்களைக்கொண்டு அதை வீட்டிற்கு எடுத்துப்போய் உடைத்துப்பார்த்தார். அதில் பைங்கிளி போன்ற பெண்ணொருத்தியை வாட முகத்துடன் தூங்க வைத்திருப்பதைக் கண்டு அவளைச் சுற்றிப் போட்டிருக்கும் அத்தர் புனுகு முதலான வாசனைத் திரவியங்களையும் ஆபரணங்களையும் பார்த்து, ஒவ்வொன்றாய் எடுத்துப் பரிசோதித்தார். அவைகளுடன் ஒரு காகிதம் இருக்கக்கண்டு, அதனால் பெட்டியில் இருந்த பெண் இன்னாரென்றும், இன்ன காரணத்திற்காக அப்படி வைக்கப்பட்டாளென்றும் அறிந்து கொண்டார். மகா யோகி என்

பவர் வைத்தியத்தில் அதிக தேர்ச்சி யுள்ளவராகையால் சவம்போலப் படுத்திருக்கும் பானுமதியின் முகம் வாடாமலிருப்பதைக் கண்டு, "ஓகோ! ராம்மோகனன் மோசம்போய் இவளை மரித்துவிட்டதாய் எண்ணிச் சமுத்திரத்தில் விட்டு விட்டதாய்த் தோன்றுகிறது. இவள் மயக்கத்தை மரணமாக எண்ணி விட்டார்களே சண்டாளர்கள்! பிரஸவகாலத்தில் படிப்பில்லாத பெண்கள்—அதிலும் வைத்தியப் பயிற்சியற்ற பேதைகள்—ஒரு பெண்ணைச் சூழ்ந்துகொள்வதில், ஆ! எத்தனைப் பொல்லாங்குகள் நேர்ந்து விடுகின்றன! உயிருக்கு மோசமும் நேர்கிறது. தெய்வாதீனமாய் இந்தப் பெட்டி இங்கே என் கண்முன்பாக அகப்பட்ட"தென்று சொல்லிக்கொண்டே அவளை மறுபடியும் பிழைப்பூட்டப் பிரயத்தினப்பட்டார். கண் விழித்துக்கொண்டதும் பானுமதி பிரமிக்காதிருக்கவும், கொஞ்சங் கொஞ்சமாகச் சுகமாய்க் கண் விழிக்கும்படிக்கும், நல்ல வீணை, சுரபத் முதலிய வாத்தியங்களைத் தனது வீட்டில் வாசிக்கும்படித் திட்டஞ்செய்து தான் வைத்தியம் செய்ய ஆரம்பித்தார். சிறிது சிறிதாய் மருந்து ஏற ஏற வீணாகானம் ஆநந்தமாய் நடந்துகொண்டிருக்கையிலேயே பானுமதி கைகால்களை ஆட்டிக்கொண்டு எழுந்திருந்தாள். அப்பொழுது மகா யோகி முதலானவர்களுக்கு உண்டான ஆநந்தத்தைச் சொல்ல வேண்டுமோ?

பானுமதி கண்விழித்ததும் நான் இப்பொழுது எங்கு இருக்கிறேன்? என் நாயகன் எங்கே? என்று வினவ, அருகாமையிலிருந்த வைத்தியர், கொஞ்சங்கொஞ்சமாய் நடந்த வரலாற்றையெல்லாம் சொல்லி, நகைகளையும் ராம்மோகனனின் கடிதத்தையும் காண்பித்தார். அவைகளைப் பார்த்ததும், ஆம்; இது என் பிரிய பர்த்தாவின் கையெழுத்துதான் என்று பானுமதி நிச்சயித்துக்கொண்டு, தனக்கு வந்த கஷ்டத்தைத் தான் அறிந்தவளாய், இனி நாம் இப்படிப் பூமியில் இருப்பதில் பிரயோஜனம் இல்லையென்று தீர்மானித்து, காவித்துணி தரித்தவளாய் அந்த ஊர் தேவாலயத்தில் சந்நியாசினியாகத் தன் வாழ்நாட்களைக் கழிக்க நினைத்தாள். இவளை மறுபடியும் பிழைக்கச் செய்த மகா யோகி என்பவருடைய ஸகோதரியும் அந்த ஊர் தேவாலயத்தில் தபசிப்பெண்ணாக இருந்தபடியால், அவளுடன் சேர்ந்து இவளையும் அங்கிருக்கும்படியும், அந்த வைத்தியர் இவளுக்கு உடம்பு அநுகூலமானவுடன் அனுப்பிவிட்டார். அவ்விடத்தில் அவள் நிய

மம், நிஷ்டை முதலியவைகளால் தன் தேகத்தை வற்றச்செய்து கொண்டு ஈசன் திருவடிகளை எப்பொழுதும் உள்ளத்தில் வைத்தவளாய்த் தன் காலத்தைக் கழித்து வந்தாள்.

பானுமதி தனக்கு உண்டான விபத்தைத் தனது தந்தைக்குத் தெரிவித்து அவரிடம் போய்ச் சேர்ந்திருக்கலாமாயினும், அதில் அவளுக்குச் சிந்தையில்லை. கணவன் வீட்டையடைந்த பெண்மணி, கணவனுடன் ரம்மியமாயிருக்கும் காலந்தன்னில் பிறந்தகம் செல்லுகை பெருமையேயன்றி துர்ப்பாக்கியம் சூழ்ந்த காலத்தில் தனது பர்த்தாவுடன் அத்துன்பங்களை ஒருமிக்க இருந்து நுகர்கையே அறமாம்—மதிக்கப்படுவதாம். தனது இனிய பதியையும் அருமைக் குழந்தையையும் ஏககாலத்தில் இழந்த பானுமதிக்கு உலகசுகம் இவ்வளவுதானா என்ற விரக்தி மேலிட்டிடவே ஆலயத்தில் சந்நியாசிப் பெண்ணாக இருத்தற்குத்தான் விரும்பினாள். மேலும் கஷ்டகாலமொன்றில் எதுசெய்யினும் ஸித்தியாமல் அடுத்தடுத்துத் துன்பங்களை அனுகுவதாக முடிகின்றமையின்,—அத்தருணத்தில் எது புரிந்திடினும் அதற்கு நேர் விரோதமாகவே விளையுமென்பது கருதி,—அச்சோதனைச் சுழற்காற்றுச் சற்று ஓயுமட்டும் இவ்விதம் துறவறத்தில் காலம் போக்கலாமென்று பானுமதி கருதி, அவ்விதமே வைத்தியருக்கும் தெரிவிக்க அநுபவஞானியாகிய அவரும் அவள் பிரியப்படி நடப்பதானார்.

பானுமதியை ஸமுத்திரத்தில் பேழையுடன் விட்டுச்சென்ற ராம்மோகனனின் பிந்திய வரலாறு யாதெனக் கவனிப்போம். அவன் தன் குமார்த்தி சமுத்திரத்தில் பிறந்தவளாகையால் அவளுக்கு ஸாகரிகை (ஸமுத்திரத்தில் உதித்தவள்) என்று பேரிட்டு எடுத்துக்கொண்டு இராமநாதபுரத்தை யடைந்தான். ஏற்கெனவே, அந்தப் பிரதேசத்தில் உண்டான பஞ்சத்தை ராம்மோகனன் தீர்த்தவனாகையால், அவன் வந்ததைக் கண்டவுடனே அவ்விடம் இருந்தவர்கள் அனைவரும் மிகுந்த பூரிப்பை யடைந்தனர். பின்பு அவனுக்கு நேரிட்ட துன்பத்தைக் கேட்கவே, சிறு பிள்ளைகள் தொடங்கி எல்லோரும் அது தமக்கு வந்த துன்பம் போலவே கண்ணீர் வடித்தார்கள். இராமநாதபுரம் ஜமீன்தாராகிய கிருஷ்ண தேவரிடத்திலும், அவர் மனைவியாகிய மீனாக்ஷியிடத்திலும் தன் பச்சைக் குழந்தையாகிய ஸாகரிகையை ராம்மோகனன் ஒப்புவித்து அதை அன்புடன்

போஷித்து வருமாறு வேண்ட, அதற்கு மீனாக்ஷி தன் குழந்தையைவிட இந்தக் குழந்தையை மேலாகப் பார்த்துக்கொள்வதாய் உறுதிமொழி கூறினாள். அன்றியும் ஜனங்களெல்லோரும், பஞ்சத்தால் வருந்தும்பொழுது மிகுந்த தானியங்களைக் கொண்டுவந்து அவன் தங்கள் குடிகளை இரக்ஷித்தது தன் மனதில் இருக்கிறதென்றும் அதற்கு விரோதமாய்த் தான் ஏதாவது செய்யும்பக்ஷத்தில் தெய்வம் தன்னைக் கெடுத்து விடுமென்றும் ராம்மோகனனுக்குத் தேறுதல் சொல்லி யனுப்பினாள். இப்படி அவள் கூறிய வாய்மொழிகளைக் கேட்டு ராம்மோகனன் ஸந்தோஷமாய்த் தன் குழந்தையை அங்கேயே விட்டு விட்டுத் தனது நகரமாகிய காஞ்சீபுரத்திற்குச் சென்றான்.

நடுவழியில் சிறிதும் அபாயம் இன்றி தனது ஜென்ம பூமியை அணுகினான். தனது மிட்டாவை மீளவும் ஒப்புக்கொண்டு பரிபாலனம் செய்து வந்தான். இறந்துபோய் விட்டதாக அவன் கருதியிருந்த அவன் மனையாளோ புஷ்பபுரி என்னும் ஊரில் காவித்துணியுடுத்திக்கொண்டு வாழ்ந்திருந்தாள். இவளுடைய குழந்தையான ஸாகரிகை கிருஷ்ண தேவனின் ஸம்ரக்ஷணையில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து மிக்க புத்திசாலியாய்க் கல்வி கற்று வந்தாள். தெய்வம் ஆட்டிவைக்கும் கூத்தைப் பாருங்கள்! மனைவி யொருபக்கம், ஈன்ற குழந்தை யொருபக்கம், குடும்பத் தலைவனான தந்தை மற்றொரு பக்கம்! இம்மூவரும் ஒருவரையொருவர் அறிந்துகொண்டு ஒன்று சேருங்காலம் எப்போதோ? பிரிவினையே மிகுந்தது இவ்வுலகு. சோகமே—சோதனையே—இஞ்ஞாலத்தின் இயல்பு. இதனிடை நுகரும் இன்பம் மிகுமிகு கொஞ்சமே.

ஸாகரிகையின் புத்தி யாவரும் வியக்கத்தக்கதா யிருந்தது. உபாத்தியாயர் சொல்லிக் கொடுக்கின்றவைகளை மிகத் துடியாய்க் கற்றுக்கொண்டாள். எல்லாக்கலைகளும் அவளுக்குப் பதினான்கு வயதிற்கு முந்தியே வந்துவிட்டன. அவள் சங்கீதத்தில் கந்தருவப்பெண் போலும், நாட்டியத்தில் அப்ஸரஸ்ஸுகள் போலும் தேர்ச்சியடைந்தாள். தையல் வேலையிலும் அதிக சமர்த்தை. பூ, கொடி, பறவை, மிருகம், மனிதர் முதலிய எல்லாவற்றையும் அந்தந்த மாதிரியாகவே விசித்திரமாய்ப் பூப்போடுவாள். இவள் இவ்வளவு கெட்டிக்காரியாய் இருந்தது கண்டு அந்த ஊரில் யாவரும் ஸந்தோஷித்தார்கள். ஆனால் இவளது வித்துவப் பிரபாவங்கட்காக

ஆனந்தமடையாமல் மனவருத்தப் பட்டவள் ஒருத்தியே. அவள் யாரெனில் மீனாக்ஷியென்பவள்தான். அவள் ராம்மோகனனிடம் ஸாகரிகையை மிகவும் கருத்தாகப் பாதுகாக்க ஒப்புக் கொண்டவள் தான். அவ்விதமே சிறிதுகாலம் செய்துகொண்டும் வந்தாள். ஆனால் அவளுக்கு ஒரு பெண் உண்டு. அந்தப் பெண்ணும் ஸாகரிகையுடன் படித்து வந்தாள். என்றாலும் இவள்போலப் பெயர் எடுக்கக்கூடவில்லை. அதிக மந்தமதியாய் இருந்தாள். தன் பெண் ஒவ்வொரு விஷயத்திலும் தாழ்ந்து ஸாகரிகை உயர்ந்துவிடவே மீனாக்ஷிக்கு இவள்பேரில் அதிக அசூயை உண்டாகிவிட்டது. ஜனங்களெல்லாம் ஸாகரிகையைப் புகழவும் தன் பெண்ணை இகழவும் ஆரம்பிக்கவே, ஸாகரிகையை எப்படியாவது இந்தப் பூமியிலிருந்து ஒழித்துவிட வேண்டுமென்ற கொடிய எண்ணம் அவளுக்கு உண்டாயிற்று. நல்லது செய்யாமற் போனாலும் தீயது புரிதற்குப் பலவழிகள் எவ்விதமேனுங்கிடைக்கும். தான் நினைத்தபடி செய்தாலொழியத் தன் பெண்ணின் பெயர் முன்னுக்கு வரமாட்டாதென்று தோன்றவே அதை நிறைவேற்றத் 'தீரவீரன்' என்ற தன் மனிதன் ஒருவனுடன் தீர்மானப் படுத்திக்கொண்டு அவனுக்குப் பல வெகுமதிகள் செய்வதாக ஆசைகாட்டினாள். தெய்வம்கூட அவள் பங்கிலிருந்து சகாயம் செய்வதுபோல் நடித்தது. ஸாகரிகையுடன் வந்த தாதியாகிய பார்வதியும் பிணியுற்று மாண்டாள். தான் பிறந்த காலம் முதல் தன்னுடன் தாய் போன்றிருந்த அரும்பெருந் துணைவி போனதற்காக ஸாகரிகை பட்ட துக்கம் அற்பசொற்பமன்று. பிரதி நித்யமும் காலையில் எழுந்திருந்து புஷ்பங்களை எடுத்துக்கொண்டு போய்த் தாதியின் சமாதிக்குழியில் சேர்த்துப் பாடித் தொழுதுவிட்டு, தனக்குப் பிறந்தது முதல் துக்கத்தின்மேல் துக்கமாய் வருவதை நினைத்து நினைத்துத் தன் தாய் மாண்டதையும் தகப்பனார் திரும்பிப் பாராமலிருப்பதையும் தன் போஷகமாதா போனதையும் எண்ணிப் புலம்புவாள். இப்படி ஒருநாள் இவள் புலம்பிக்கொண்டிருக்கும்பொழுது தீரவீரன் என்பவனோடு மீனாக்ஷி என்னுங் கொடியவள் அங்குவந்து, 'ஏன் நீ இங்கு தனியாய்ப் புலம்புகிறாய்? இவன் உனக்கு எப்போதும் துணையாயிருந்து பணிபுரிவான். ஸமுத்திரம் முதலான நிர்மலமான இடங்களில் ஸந்தோஷமாய் உலாவு. உன் தகப்பனார் சீக்கிரம் வரப்போகிறதாகக் கேள்வி. உன் தேகம் இவ்வாறு

இளைத்துப்போயிருக்கிறதைக் கண்டால் உள்ளம் நோவார். துக்கத்தை எப்பொழுதும் பாராட்டினால் நீ இப்படித்தான் உலர்ந்து போவாய். அவள் காலம் வந்து போய்விட்டாள். போனவளுக்காக அழுதாற் பயனென்ன? இனி வீணே புலம்புவதை விடுத்து மனதை உற்சாகப்படுத்தி உலக இன்பங்களில் செல்லவிடு. நீயோ பெண்குழந்தை. துக்கமுற்ற குடும்பத்தை உன் வரவாலும், உன் புன்னகையாலும், வதனகாந்தியாலும், வாக்விலாஸத்தாலும், கூந்தலிற் சூடும் வெண்மை பொருந்திய மலர்களின் பரிமள வசீகரத்தாலும் புதுமைப் படுத்தி லக்ஷ்மீகரமாக்க வல்ல சக்தி நினக்கு இயற்கையிலேயே அமைந்திருக்கையில் ஆநந்த விளைநிலமாகிய சோகாக்கினியில் வீழ்ந்து தகிக்கப்படுதல்,—அதற்கு உன்னை ஆளாக்கிக் கொள்ளுதல்,—அறமோ? யாவும் கற்ற உனக்கு நானோ கல்வி பேசுவது? என்று அவளைத் தேற்றி, அவளைக் கொலைசெய்யத் திட்டம் செய்து அழைத்துவந்த தீரவீரனை அங்கு இருக்கச் செய்துவிட்டு மீனாக்ஷி தன் இருப்பிடம் போய்ச் சேர்ந்தாள். ஹா! வஞ்சக நாவில் எத்தனை மதுரத்துளிகள்! அமிர்தமொழிகள்!! கடிதத்திலும் இவ்விதமே எழுதி மயக்கும் மாயப்பிசாசங்கள் அநந்தமாம். மீனாக்ஷி போகும்பொழுது, நான் சொன்னது நினைவில் இருக்கட்டும் என்று தீரவீரனை நோக்கிக் கூறிச்சென்ற வாசகம் ஸாகரிகையின் மனதில் சிறிது அச்சத்தையும் பலபல யோசனைகளையும் உண்டாக்கியது. இவ்வித நெஞ்சத்தின் சோர்வு—ஸஞ்சலம்—ஏக்கம்—திகைப்பு இவைகள் யாவும் வருமுற் குறியாகும். வினைசூழ் வேளையின் முன்னறிவிப்பாகும்.

கொலைபாதகனான தீரவீரன் ஸாகரிகையை ஸமுத்திரத்தினருகேயழைத்துக்கொண்டு போனான். தான் முதலிற் பிறந்த இடமான ஸமுத்திரத்தின் அழகைக் கண்டு ஸாகரிகை பூரித்து, தனது தாதி பார்வதி தன்னிடம் சொல்லியிருந்தவைகளெல்லாம் நினைவுக்கு வரவே, கூட இருந்த மனிதனைப் பார்த்து, தான் பிறந்தது, தன் தந்தையார் மரணித்தது தன் மாதாவைப் பெட்டியிலிட்டுப் பூட்டி ஸமுத்திரத்தில் விட்டது முதலான ஸகல சங்கதிகளையும் சவிஸ்தாரமாய்ச் சொல்வதானாள். கொல்ல ஒப்புக்கொண்டு வந்த மனிதன் அவளை நோக்கி, நீ சொன்னது போதும். சீக்கிரத்தில் நீ பிரார்த்திக்க வேண்டிய மந்திரங்களைச் சொல்லிப் பிரார்த்தித்துக்கொள். நான் உன்னைக் கொன்றுவிட வேண்டும். இது மீனாக்ஷியம்மாளின் உத்தரவு' என்று கூறினான்.

இங்கு, ஸாகரிகை அத்துஷ்டனை நல்லவனாக நினைத்து அன்பாகப் பேச முயன்ற செய்தியுடன் தாயை இழந்த குழந்தைகள் மாற்

ளுந்தாயுடன் அவளைத் தன் மாதா போன்றும் எண்ணி அன்பு குலா விடின் என்ன நேருமோ அந்த ஸம்பவத்தையும் ஒத்துப் பார்த்துக் கொள்ள வேண்டியது. இது நிற்க, தீரவீரன் நவின்ற மொழிகளைச் செவியுற்ற ஸாகரிகை நடுநடுங்கி "ஆஹா! சாகவேண்டுமா நான்? யாது காரணமோ தெரியவில்லையே! நான் ஒருநாளும் அவளைப் பார்த்து ஒரு பொல்லாத பேச்சுக்கூடப் பேசினதில்லையே. நான் ஈ எறும்புகளுக்குக்கூட உபத்திரவம் செய்யாமல் நடந்துகொண்டு வருகிறேனே. என்னை யறியாமல் ஒரு பூவை மிதித்து விட்டாலுங்கூட, ஐயோ இப்படிச் செய்து விட்டேனே! என்று வருத்தப்படுகிறவளாயிற்றே" என்று வருத்தப்படுகையில் கொலைக்கஞ்சாத தீரவீரன், அதெல்லாம் எனக்கொன்றும் தெரியாது; உன்னைக் கொன்றுவிட எனக்கு உத்திரவே யல்லாமல், காரணம் சொல்லும்படி எனக்கு ஆக்ஞையில்லையென்று கூறிக் கத்தியை உருவினான். கத்தியைக் கண்டு நடுநடுங்கி ஸாகரிகை நிலத்தில் வீழ்ந்து மூர்ச்சை யடைந்தாள். அந்த க்ஷணம் அவ்விடம் ஸமுத்திரத்தினின்று வந்திறங்கிய சில கடற் கொள்ளைக்காரர்கள் வேகமாய் அங்கு வந்து ஸாகரிகை யென்னும் பெண்மாணிக்கத்தைச் சிறை பிடித்துக்கொண்டு போய்விட்டனர். இவ்விதம் தெய்வச் செயலால் ஸாகரிகை தீரவீரனால் கொல்லப்படாமல் உயிர் தப்பினாள். தீரவீரன் தனது எஜமானியாகிய மீனாக்ஷி கோபித்துக்கொள்ளாம லிருக்கும்பொருட்டு ஒரு நாயைக் கொன்று அதன் இரத்தத்தைக் காட்டி ஸாகரிகையைக் கொன்றுவிட்டதாகத் தெரிவித்தான். அந்தக் கொடிய பெண் மிருகமும் ஸாகரிகை தேகசுகமின்றித் தியங்கி மயங்கி மாண்டதாய் ஜனங்களுக்குத் தெரிவித்து ஒரு பெண் சவத்தை அலங்கரித்துப் பெட்டியுள் வைத்துச்சென்று புதைத்துச் சமாதி யொன்று கட்டி அதில் ஸாகரிகை யென்பவள் இறந்து விட்டதாகச் சிலாசாசனங்களையும் பதிப்பித்தாள். அவளது அதிர்ஷ்டகால வசமாக அவளது கணவன் கிருஷ்ணதேவனும் வெளியூருக்குச் சென்றிருந்த சமயமாக இருந்தது.

ஆ! பெண்கள் எதற்குத்தான் துணியார்கள்? நல்லதுக்கும் நன்மையாய் விளங்குவார்கள். தாயகமாய்ப் பிரகாசிப்பார்கள். தீயது புரிய நினைப்பினோ அதற்கும் ஏற்றவாறு கருமம் சிந்தித்து எண்ணிய வண்ணம் நிறைவேற்றியே தீர்ப்பார்கள். எதையும் வெளிவிடாமல் தமது மனதிற்குள் தானே அடக்கிக்கொண்டு முகம் ஒரு மாதிரியாயும் அகம் ஒரு மாதிரியாயும் காட்டி நடந்து கொள்ளக்கூடிய ஒரு தனித்த ஸக்தி பெண் பிறப்புடனேயே கூடப் பிறந்துள்ள ஒரு அபூர்வ அம்சமாக இருக்கின்றது. அவர்கள் மனம் வைத்தால் மங்களம் தான். இல்லையாகில்-மனம் வேறுபடுமாகில்—அவர்களை நம்பினவர்களுக்குப் போங்காலம் குறுக்கிட்ட மாதிரிதான். ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே என்ற பழமொழி எத்தனையோ அநுபவ உண்மைகள் பொதிந்த உரையேயாகும்.

திகம்பர சாமியார்

பால்ய லீலை

1-வது அதிகாரம்

அமிர்த சஞ்சீவி

இங்கிலீஷ் 1881-வது வருஷத்திற்குச் சரியான விக்கிரம வருஷம் புரட்டாசி மாதத்தில் ஒருநாள் மாலை வேளையில் நமது கதை ஆரம்பமாகிறது. மைசூருக்குத் தெற்கில் சுமார் இரண்டுகாத தூரத்திற்கிப்பால் கிழக்கு மேற்காகச் சென்றுகொண்டிருந்த விசாலமான ஒரு ராஜபாட்டையின் வழியாக ஒரு பிரயாணி சென்றுகொண்டிருந்தார். அவர் சுமார் 35, அல்லது, 40 வயதடைந்தவராகவும், அழகான சிவந்த தேகம், வசீகரமான முகம், கம்பீரமான தோற்றம், உல்லாஸமான மனப்போக்கு, செல்வப் பெருக்கினாலுண்டாம் மனோதிடம், எதற்கும் அஞ்சாத அலட்சியப் பார்வை முதலிய குணங்களுடையவராகவும் காணப்பட்டார். கருத்து அடர்ந்து செழிப்பாக வளர்ந்திருந்த அவரது தலைமயிர் வாசனைத்தைல மூட்டப்பெற்று வாரி முடியப்பட் டிருந்தது. அந்த முடிப்பு சுமார் ஒரு தேங்காய்ப் பருமனிருக்கலாம். தலையின் முன்பக்கத்தில் மயிர் தலையோடு தலையாகப் படிந்து மினுமினுப்பாகக் காணப்பட்டதன்றி, அன்றையதினம் அவருக்கு க்ஷவரம் செய்துவிட்ட நாவிதனால் விடப்பட்ட கன்றுக் குடுமி பங்களாக்களில் வெட்டிவிடப்பட் டிருக்கும் மருதாணி வேலி போல எல்லை கட்டி நின்றது. மாசுமறுவற்ற ஆகாய வட்டத்தில் முளைத்தெழும் பௌர்ணமிச் சந்திரன்போல, அவரது விசாலமான நெற்றியில் புருவவிற்களி னிடையில் இரண்டணா அளவுள்ள சந்தனத் திலகமிடப்பெற்றிருந்தது. முகத்தில கருததடாநது கூாமையாக நீண்டிருந்த மீசைகளின்மேல், அவரது இடது கை அடிக்கடி சென்று அதன் நுனியை வளைத்துவிட்டு அதனிடம் விஷமம் செய்தபடியே இருந்தது. அவரது செவிகளில் வைரக்கடுக்கன்கள் அணியப்

பெற்றிருந்தனவாதலால், அவைகள் ஒப்புயர்வற்ற இரண்டு நட்சத்திரச் சுடர்கள்போல ஜ்வலித்து அவரது அழகிய முகத்தின் வசீகரத் தன்மையைப் பன்மடங்கு பெருகச் செய்துகொண்டிருந்தன. அவர் தமது உடம்பில் சாதாரணமான ஒரு பட்டுச்சட்டை யணிந்து, வெள்ளை வெளேரென்று நிரம்பவும் துல்லியமாக சலவை செய்யப்பட்டிருந்த ஒரு ஜரிகை அங்கவஸ்திரத்தை இடது தோளில் போட்டு, இரண்டு பக்கத்தையும் சேர்த்துத் தமது வலது இடுப்பண்டை முடிந்து நுனிகளை அழகாகத் தொங்கவிட்டிருந்தாராதலால், அதன் இரண்டு தலைப்புகளிலும் ஒரு சாணளவு நிறைந்திருந்த தங்க ஜரிகைகள் ஒன்றுகூடி தகத்தகாயமாக மின்னிக் கண்ணைப் பறித்தன. அவர் தமது இடையில் விலையுயர்ந்த ஒரு பட்டு வஸ்திரத்தை மூலைக்கச்சமாக அணிந்து, காலில் பட்டு ஜோடுகள் தரித்திருந்தார்.

இத்தகைய அலங்காரம் நிறைந்த புருஷர் நிரம்பவும் விலையுயர்ந்ததாகவும், கட்டுமஸ்தான தேகமுடையதாகவும், கம்பீரத் தோற்றமுடையதாகவும் காணப்பட்ட ஒரு குதிரையின்மேல் உட்கார்ந்து கிழக்கு முகமாகச் சென்றுகொண்டிருந்தார். குதிரையின் கடிவாள வார் அவரது மடியின்மீது வைக்கப்பட்டிருந்தது. அவரது வலது கையில் பட்டுக்குஞ்சம் கட்டப்பெற்ற குதிரைச் சவுக்கொன்று காணப்பட்டது. இடது கை அடிக்கடி மீசையை நெருடுவதும், கடிவாள வாரைப் பிடிப்பதுமாக இருந்தது. அவர் தமது கால்களை இரண்டு பக்கங்களிலும் தொங்கிக்கொண்டிருந்த அங்கவடிகளில் இலேசாக நுழையவிட்டுக் குதிரையின் உடம்போடு உடம்பாக இறுக அணைத்திருந்தாராதலால், அவர் கடிவாளவாரினால் தமது குதிரையை நடத்தாமல், கால்களை அழுத்துவதாலும், சந்தர்ப்பத்திற்குத் தகுந்தபடி இடிப்பதாலும் அதை இலேசாக நடத்தி சாதாரண நடையாக விடுத்துக்கொண்டு சென்றார்.

அவர் சென்றுகொண்டிருந்த ராஜபாட்டையின் இருபுறங்களிலும் செழிப்பாகவும் அடர்த்தியாகவும் வளர்ந்திருந்த புங்கை மரங்கள் அப்புறம் இப்புறம் எள்ளளவும் விலகியிராமல் நூல் பிடித்தது போல ஒரே பத்தியாகக் காணப்பட்டன. மரப்பத்திகளுக்கப்பால் புஞ்சை வயல்களும், அடர்த்தியான மரப்புதர்களும், காடுகளும், மலைக்குன்றுகளுமாக நிறைந்திருந்தன. தரை சமமாக இல்லாமல் பயங்கரமான பெருத்த பெருத்த மேடுகளும், கிடுகிடு பாதாளங்களும்,

கழிகளும், கற்பாறைகளும், முட்புதர்களும் நிறைந்ததாய்க் காணப்பட்டது.

நமது பிரயாணி சென்றுகொண்டிருந்தது மாலைவேளையாதலால், சூரியன் அநேகமாய் மேற்றிசையில் மறைந்து போய்விட்டான். உலகத்தையே பொன்மயமாக்கிக் கொண்டிருந்த மஞ்சள் வெயில் மற்ற இடங்களிலெல்லாம் மறைந்துபோய், உயர்வான குன்றுகளின் சிகரங்களில் மாத்திரம் ஆங்காங்கு தென்பட்டுக்கொண்டிருந்தது. அது மாலை மயங்கி இருளாக மாறும் தருணமாக இருந்தது. காக்கை முதலிய பறவைகளெல்லாம் கா கூவென்று கூச்சலிட்டுக் களிவெறி கொண்டு அங்குமிங்கும் அவசரமாக ஓடிக்கொண்டிருந்தன. ஆங்காங்கு கணகணவென்ற மணியோசையோடு மாட்டு மந்தைகளும் ஆடுகளும் தத்தம் இருப்பிடங்களுக்குத் திரும்பிப் போய்க்கொண்டிருந்தன. கலப்பை நுகத்தடி முதலியவற்றைத் தோள்மீது வைத்த குடியானவர்களும், புல் கட்டுகளையோ, அல்லது, கஞ்சிப் பானைகளையோ தலைமீது வைத்த குடியான ஸ்திரீகளும் மூலைக்கொருவராகத் தத்தம் இல்லங்களை நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். சூரியனது வெப்பம் முழுதும் தணிந்துபோனதாலும், இனிமையான குளிர்ந்த தென்றல்காற்று வீசியதாலும் அந்த மாலைவேளை நிரம்பவும் மனோகரமாகவும், மனிதரது மனதை ஊக்கி அபரிமிதமான உற்சாகத்தையும், குதூகலத்தையும் உண்டாக்கத் தக்கதாகவும் இருந்தது. ஆங்காங்கு காணப்பட்ட ஆலவிருக்ஷங்களில் ஏராளமான குயில்கள் நிறைந்து தங்களது மாதுரியமான குரலைக் கிளப்பிவிட்டுத் தேன்மாரி பொழிவதுபோல சங்கீதம் பாடிக்கொண்டிருந்தன. அந்தப் பிரதேசம் முழுதும் இன்பமயமாகவும் ஆநந்த நிறைவாகவும் காணப்பட்டதாகையால், அந்த ரமணீயக் காட்சியில் தமது மனதை லயிக்க விட்டவராய்ச் சென்ற நமது பிரயாணி அடிக்கடி கீச்சுக் குரலில் ஏதோ ஒரு பாட்டை உல்லாஸமாகப் பாடியவண்ணம் போய்க்கொண்டிருந்தார்.

அவ்வாறு சென்றவர் சிறிது தூரத்திற்கப்பால் ஓர் ஒற்றையடிப்பாதை இருந்ததைக் கண்டு, தமது குதிரையை இடித்து ராஜபாட்டையிலிருந்து அதை ஒற்றையடிப் பாதையில் திருப்பி நடத்திக்கொண்டு வயல்களின் வழியாகச் செல்லலானார். அவர் அந்த இடத்தையும் அங்கிருந்த பாதைகளையும் நன்றாக அறிந்தவர்போலக்

காணப்பட்டாரே யன்றி அந்த இடத்திற்குப் புதிய மனிதராகக் காணப்படவில்லை. சிறிது தூரத்திற்கப்பால் ஒரு சிறிய ஊர் காணப்பட்டது. அந்த ஊரில் நாலைந்து பெரிய புளியமரங்களும் சுரைக் கொடிகள் படர்ந்த கூரையுள்ள பத்துப் பதினைந்து வீடுகளும் ஒரு சிறிய அம்மன் கோவிலும் காணப்பட்டன. ஊருக்குள் நுழையும் பாதையில் நாலைந்து நாய்கள் வெள் வெள்ளென்று குலைத்துக்கொண்டிருந்தன. வீடுகளில் ஏற்றப்பட்டிருந்த தீபங்கள் தூரப்பார்வைக்கு மின்மினிப் பூச்சிகள்போலத் தோன்றி முணுக்குமுணுக்கென்று எரிந்துகொண்டிருந்தன.

நமது பிரயாணி அந்த ஊருக்குள் நுழையாமல், அதற்கு சுமார் ஒரு பர்லாங்கு தூரத்திற்கு இப்பால் ஒற்றையடிப்பாதையை விட்டுப் பிரிந்து வயல்களுக்குள் புகுந்து நிரம்பவும் உறுதியாகவும் துணிபாகவும் தமது குதிரையை நடாத்திக்கொண்டு சென்றார். சிறிது தூரத்திற் கப்பால் ஒரு சிறிய ஆறு குறுக்கிட்டது. அதையும் கடந்துகொண்டு நமது பிரயாணி அப்பால் செல்லவே, அவ்விடத்தில் ஒரு தாமரைக்குளமும், அதற்கெதிராக இருந்த பாழடைந்த பிரம்மாண்டமான ஒரு சத்திரமும் எதிரில் தோன்றின. அந்தச் சத்திரத்தில் சிலபாகம் இடிந்து விழுந்திருந்தது. மற்ற பாகங்களில் ஆலஞ்செடிகள், சப்பாத்துப் புதர்கள், காட்டாமணக்குச் செடிகள் முதலியவை ஆங்காங்கு தென்பட்டன. ஆனாலும் அந்தச் சத்திரத்தின் முக்கால் பாகமும் இடியாமல் நல்ல நிலைமையிலேயே இருப்பதாய்க் காணப்பட்டது. அவ்விடத்தில் விளக்கு முதலிய உயிர்ச்சின்ன மெதுவும் காணப்படாதிருந்தாலும், நமது பிரயாணி அதன் வாசலை நோக்கிச் சென்று திண்ணையின் பக்கத்தில் நெருங்கிய உடனே குதிரையை விட்டுக் கீழே இறங்கி, அதன் கடிவாள வாரைக் கம்பத்தில் கட்டிவிட்டு, நாற்புறங்களிலும் திரும்பித் தமது பார்வையைச் செலுத்தித் தம்மை யாரும் கவனிக்கவில்லை யென்று நிச்சயித்துக்கொண்டு வாசற்படியிலேறித் தமது குதிரைச் சவுக்கின் அடிப்பக்கத்தினால் மெதுவாகக் கதவை லொட் லொட்டென்று இரண்டு மூன்று தடவை தட்டினார்; பிறகு ஐந்து நிமிஷநேரம் மௌனமாக இருந்தபின் மறுபடியும் கதவைத் தட்டினார். அடுத்த க்ஷணத்தில் ஒரு மனிதர் உட்புறத் தாழ்ப்பாளை விலக்கிவிட்டுக் கதவை மெதுவாகச் சிறிதளவு திறந்து வைத்துக் கொண்டபடி தமது முகத்தை சந்தேகத்

தோடும் அச்சத்தோடும் நீட்டி வெளிப்பக்கம் பார்த்தார். பார்த்தவர், பக்கத்தில் வந்து நின்ற நமது பிரயாணியின் அடையாளத்தை உடனே கண்டுகொண்டார். அவரது முகத்தோற்றம் சாதாரணமாக மாறியது. அவர் உடனே கதவை நன்றாகத் திறந்துவிட்டு "வாருங்கள், ஐயா! உள்ளே வாருங்கள். குதிரையைக் கம்பத்தில் கட்டி இருக்கிறீர்களல்லவா? அப்படியே இருக்கட்டும். உள்ளே போகலாம் வாருங்கள்" என்று அன்பாகவும் மரியாதையாகவும் கூற, நமது பிரயாணி மகிழ்ச்சியும் புன்னகையும் தோற்றுவித்த முகத்தினராய் உள்ளே நுழைந்தார். உடனே கதவு உட்புறத்தில் தாளிடப் பட்டது.

நமது பிரயாணியும், கதவைத் திறந்தவரும் அவ்விடத்தை விட்டுத் தாழ்வாரம் முற்றம் முதலியவற்றையும் பல அறைகளையும் கடந்து இரண்டாங்கட்டுக் கூடத்தை அடைந்தனர். எங்கும் இருள் சூழ்ந்திருந்தாலும் அந்தச் சததிரம் இடிந்தும், எருக்கு முளைத்தும், பாழடைந்தும் இருந்ததென்பது நன்றாகத் தெரிந்தது. உட்புறம் நிர்மானுஷ்யமாகவும் பயங்கரமாகவும் காணப்பட்டதானாலும், அவர்களிருவரும் சிறிதும் அஞ்சாமல் உள்ளே புகுந்து இரண்டாங்கட்டையடைந்து கூடத்திற்குப் போயினர். அந்த இடமும் பாழிடமாக இருந்தாலும், கூடம் மாத்திரம் நன்றாகப் பெருக்கி மெழுகிச் சுத்தி செய்யப்பட்டிருந்தது. ஒரு பக்கத்தில் ஒரு விசிப்பலகை போடப்பட்டிருந்தது. அதன்மேல் ஒரு பாகத்தில் புலித்தோலொன்று பரப்பப்பட்டிருந்தது. தரையில் ஒரு பக்கத்தில் இரண்டு மூன்றிடங்களில் எருமுட்டைப் புடங்கள் காணப்பட்டன. இன்னொரு பக்கத்தில் இருபது முப்பது மண் அகல்கள் வைக்கப்பட்டிருந்தன. இன்னொரு பக்கத்தில், பலவிதமான மூலிகைகளும், வீரம், பூரம், லிங்கம், வெடியுப்பு, தாளகம், பாதரசம் முதலிய மருந்து சாமான்களும் ஏராளமாகக் காணப்பட்டன. ஒரு மூலையில் ஒரு மண் தோண்டியில் ஜலம் வைக்கப்பட்டிருந்தது. விசிப்பலகைக்கு அடுத்தாற்போல ஒரு பெரிய கணப்புச்சட்டி காணப்பட்டது. அது நிறைய நெருப்புத் தணல்கள் போடப்பட்டு தகதகவென்று பிரகாசித்துக் கொண்டிருந்தன. தணலின் மத்தியில் ஏதோ மருந்துகள் நிறைந்த ஒரு குகை வைக்கப்பட்டிருந்தது. அதற்கருகில் ஊதுகுழாய், இடுக்கி முதலிய கம்மாளர் ஆயுதங்கள் ஏராளமாகக் கிடந்தன. அந்தக் கணப்

பிலிருந்த தணல்களின் பிரகாசமே அந்தக் கூடம் முழுதிற்கும் போதுமானதாக இருந்ததானாலும், சுவரின் மாடத்தில் ஒரு சிறிய விளக்கும் எரிந்துகொண் டிருந்தது.

கதவைத் திறந்து நமது பிரயாணியை உள்ளே அழைத்துச் சென்றவர் வாகடம் செய்யும் ஒரு சாமியார் என்ற எண்ணம், அங்கே வரும் எவர் மனதிலும் உதிக்கத் தக்கதாய் அந்த இடமும் அங்கிருந்த பொருட்களும் அமைந்திருந்தன. அந்த வாகடச் சாமியாருக்கு சுமார் நாற்பது, அல்லது நாற்பத்தைந்து வயதிருக்கலாம். அவரது உடம்பு சிவப்பாகவும், முகம் வசீகரமாகவும் இருந்தன. அவரது முகத்தில் மீசைகள் காணப்படவில்லை. தலையின் உச்சியில் மாத்திரம் குட்டையான நாலைந்து மயிர்கள் காற்றில் பறந்துகொண் டிருந்தன. அவரது கண்கள் நிரம்பவும் கூர்மையாகவும் ஆழங்காண இயலாதனவாகவும், எதிராளியின் நோக்கத்தையும் மனப்போக்கையும் வெகு நுட்பமாக உணர்ந்து கொள்ளக்கூடிய அபார சக்தி வாய்ந்தவையாகவும் இருந்தன. ஆனாலும் அவரது தோற்றம் பொறுமையும் சாந்தமும் வடிவெடுத்தது போலக் காணப்பட்டது. அவர் நமது பிரயாணியை அந்தக் கூடத்திற்கு அழைத்து வந்த பின் அவரோடு வார்த்தை'யாடாமல், நேராகக் கணப்பண்டை போய் உட்கார்ந்து கொண்டு, ஊதுகுழாயை இடது கையில் வைத்து ஊதத்தொடங்கி, இடுக்கியை வலது கையிலெடுத்து வைத்துக்கொண்டு தணலின் மத்தியிலிருந்த குகைக்குள் கிடந்த மருந்துகளைக் கிளரிக் கொடுத்தபடி அவற்றின் மாறுபாடுகளை இமைகொட்டாமல் உற்றுக் கவனித்தபடி உட்கார்ந்திருந்தார்.

விசிப்பலகையின்மீது ஒரு பக்கமாக உட்கார்ந்து கொண்ட நமது பிரயாணி வியப்பும், நம்பிக்கையும், அவநம்பிக்கையும், பொறுமை இன்மையும் கொண்டவராய்ச் சிறிது நேரம் உட்கார்ந்தும், சிறிது நேரம் எழுந்து குனிந்து குகைக்குள் தமது பார்வையைச் செலுத்தியும் சஞ்சலமுற்றவராக இருந்தார்.

அவ்வாறு இருவரும் மௌனமாகவே இருக்க, சுமார் அரை நாழிகை சாவகாசம் கழிந்தது. வாகடச்சாமியார் கல்போலச் சமைந்து பொறுமையே வடிவாகத் தமது முழு மனதையும் குகைக்குள்ளேயே செலுத்தினவராய் உட்கார்ந்திருந்தார். நமது பிரயாணிக்கோ இருக்கை கொள்ளவில்லை. [illegible] ங்காமல் தவித்தது அவர் வீண் காலதாமதமாவதை சகிக்காது, அருவருப்பும் கடுகடுப்பும் கொண்

டவர்போல மாறி விசிப்பலகையை விட்டெழுந்து, கூடத்தில் அங்குமிங்கும் உலாவத் தொடங்கினார். அவ்வாறு அவர் எழுந்து உலாவியதை உணர்ந்த வாகடச் சாமியார் பின்புறம் நிதானமாகப் பார்த்துவிட்டு மறுபடியும் கணப்பையும், அதற்குள்ளிருந்த குகையையும் கூர்ந்து கவனிக்கலானார்.

எழுந்து இரண்டு மூன்றுதரம் அப்பால் சென்றுவிட்டுத் திரும்பிய பிரயாணி கணப்பண்டை நெருங்கிவந்து குனிந்து குகைக்குள் தமது பார்வையைச் செலுத்தியபடி “என்ன பிள்ளையவாள்! மருந்து என்ன சொல்லுகிறது? கொஞ்சமாவது உருகியதா? இன்னும் அதிக நேரம் பிடிக்குமா?” என்று இரண்டு மூன்றுதரம் கொட்டாவி விட்டுக்கொண்டு நயமாக வினவினார்.

சாமியார் குகையைப் பார்த்தபடி “எவ்வளவு அவசரம்! இதற்குள்ளா உருகிப்போகும்! என்ன செட்டியார் ஐயா! ஆக்கப்பொருத்தவனுக்கு ஆறப் பொறுக்கவில்லையென்ற கதைபோலப் பேசுகிறீர்களே! வேளை வந்துவிட்டால், இதே க்ஷணத்திலும் காரியம் கைகூடிவிடும்” என்று நிரம்பவும் நிதானமாகப் பேசியபடி நன்றாக மூச்சை இழுத்து ஊதுகுழாயால் ஊதினார்.

அதைக் கேட்ட நமது பிரயாணியான செட்டியார் அதிருப்தியடைந்தவர்போலத் தமது முகத்தைச் சுளித்துக்கொண்டு தமது முகத்தை அப்பால் திருப்பி நடந்தவராய் “ஓகோ! அப்படியா! வேளை வரவேண்டுமோ! அந்த வேளை வருவதானால், அது என்னுடைய வீட்டுக்கே வராதோ? அது இந்தப் பாழும் சத்திரத்துக்குத்தான் வருவேனென்று சொல்லுகிறதோ? வேளையென்பது நம்முடைய அடிமையேயன்றி, நாம் அதனுடைய அடிமையல்ல. நாம் உண்மையான சாஸ்திரஞானத்தையும் திறமையையும் உபயோகித்து சரியான வழியில் முயற்சித்தால், அந்த வேளை தானாகவே வந்து சேராதா? நாம் வழி தெரியாமல் இருட்டில் தடவினால் வேளை என்ன செய்யும்? அது ஒருநாளும் வரவே வராது,” என்று சுலபமாகவும் குத்தலாகவும் பேசியபடி அங்குமிங்கும் உலாவத் தொடங்கினார். ஆனால் அவரது வார்த்தைகள் அவ்வளவு கசப்பாக இருந்தனவானாலும், முகம் சாதாரணமாகவும், எவ்வளவு நேரமானாலும், எத்தனை இடையூறுகள் நேருவதானாலும் பொறுமையோடிருக்க உறுதிசெய்து கொண்டிருப்பவரது முகம் போலவும் காணப்பட்டது.

செட்டியாரது கூர்மையான சொற்களால் சிறிதும் சலனமடையாதவர்போலக் காணப்பட்ட சாமியார் "எந்த விஷயமானாலும், ஜெயம் உண்டாவதற்குக் கொஞ்சம் நேரந்தான் பிடிக்கும். ஜெயமாகிய லக்ஷ்மி சாதாரணமான ஒரு பெண்ணைக் காட்டிலும் பதினாயிரமடங்கு நாணமுடையவள். அவளை நாம் வசப்படுத்துவது செட்டியாரையா நினைக்கிறபடி அவ்வளவு சுலபமாக இருந்தால், உலகத்தில் மனிதர் நெற்றி வேர்வை நிலத்தில் விழ இராப்பகல் உழைத்து உழைத்து அரும்பாடுபட வேண்டிய அவசியமே இல்லை. ஒருவர்போல எல்லோரும் ஜெயலக்ஷ்மியின் அருள்பெற்று, எல்லோரும் மகாராஜாவாகி விடலாமே! பிறகு உலகத்தில் பெரியவன், சிறியவன், எஜமானன், வேலைக்காரன், பணக்காரன், ஏழை, சுகபுருஷன், துன்புறுபவன் என்ற வித்தியாசமே இருக்கக்கூடாதல்லவா! உலகத்தில் இப்படிப்பட்ட கோடாநுகோடி ஏற்றத் தாழ்வுகளிருப்பதிலிருந்து ஜெயலக்ஷ்மி என்னும் பெண்மணி எல்லா மனிதரிடத்திலும் சமமான பிரியம் வைக்கிறதில்லையென்பது எளிதில் தெரியவில்லையா? எவனொருவன் அவளிடத்தில் உண்மையான பயபக்தி விநயமுடையவனாய் விடாமுயற்சியோடு அவளைக் காதலிக்கிறானோ, அவனிடத்திலேதான் அவள் தன் நாணத்தை நீக்கி மர்மங்களைக் காட்டி அளவற்ற சுகத்தையும் சந்தோஷத்தையும் அள்ளிச் சொரிவாள். அவளை அடையத்தக்க யோக்கியதை நம்மிடமிருக்கிறதென்பதை நாம் நம்முடைய நீடித்த உழைப்புக் குணத்தினாலும், பொறுமைக் குணத்தினாலும் காட்டியே, அவளுடைய தயவை சம்பாதித்துக் கொள்ளவேண்டும். அவள் நம்முடைய அதிகாரத்துக்கு அடங்கியவளா என்ன!" என்று நிரம்பவும் நிதானமாக மறுமொழி கூறினர்.

அதைக் கேட்ட செட்டியார் சிரித்துக்கொண்டு முன்னிலும் அதிக குத்தலாகப் பேசத்தொடங்கி "பிள்ளையவாள் பேசுவதே பேசுவது! நீங்கள் பேசும் வார்த்தைகளின் கருத்து எனக்கு சரியானபடி விளங்கவே இல்லை. ஏதோ காக்கை குருவிகள் கத்தினால் நமக்கு என்ன அர்த்தம் ஏற்படுமோ, அல்லது, காற்று சப்தித்தால், அதற்கு என்ன அர்த்தம் ஏற்படுமோ அந்த அர்த்தந்தான் என் மனதில் படுகிறது. ஜெயலக்ஷ்மியென்பது ஒரு பெண்ணாம், அவள் நிரம்பவும் நாணமுடைய பதிவிரதையாம், தன்னை அடைவதற்குத் தக்க யோக்கியதை எவனுக்கிருக்கிறதோ அவனுக்குத்தான் வாய்ப்பாளாம்! ஆகா! நீங்

கள் சொல்வது உலக அநுபவத்துக்கு நேர் விரோதமாக இருக்கிறதேயன்றி வேறல்ல. உலகத்தில், எந்த அம்சத்திலும் கொஞ்சமும் யோக்கியதை இல்லாதவனிடத்தில் பணம் குவிந்து கிடக்கிறது. நற்குணமும், நல்லொழுக்கமும், தயாளமும், மற்ற சகலமான சில குணங்களும் வாய்ந்தவர்கள் நித்திய தரித்திரராகவே இருக்கின்றனர். எவ்வித உழைப்புமின்றி, துரும்பை எடுத்துத் துரும்போடு போடாத ஒரு மனிதன் செல்வத்திலும் சுகங்களிலும் கிடந்து புரளுகிறான். பொழுது விடிந்தால் பொழுது பட்டால் உழைத்து உழைத்து தேகத்தைக் கொன்று சித்திரவதை செய்து சக்கை சாறுப் பிழிகிற கூலியாள் சம்பாதிக்கும் பணம் அவனுடைய உடம்பை போஷிப்பதற்குக்கூடப் போதுமானதாக இருக்கிறதில்லை. அவன் விஷயத்தைக் கவனித்துப் பார்த்தால், உடம்புக்காக ஆகாரமாக, அல்லது, ஆகாரத்துக்காக உடம்பா என்ற சந்தேகம்கூட உண்டாகிவிடும். ஜெயலக்ஷ்மி என்ற மாது நற்குணங்களுடையவனையாவது, பொறுமையோடு உழைக்கிறவனையாவது விரும்புகிறதே நிரம்பவும் அபூர்வமாக இருக்கிறது. கொஞ்சமும் அருகமற்றவன் மேல்தான் அவள் அநேகமாய் ஆசைவைத்துத் தன்னுடைய சுகங்களையெல்லாம் கொடுப்பதை நாம் பார்க்கிறோம். அவளை நாம் பதிவிரதையென்றாவது நிர்ணயமுள்ளவளென்றாவது சொல்வது தவறு. எவனிடம் பணம் அதிகமாக இருக்கிறதோ, அவனிடம் பணம் மேன்மேலும் போய்க் குவிகிறது. எவனுக்குப் பசி இல்லையோ அவனுக்குத்தான் மேன்மேலும் விருந்துகளும், நிலங்களும், சம்பத்துகளும் கிடைக்கின்றன. ஆகையால் நாம் ஜெயலக்ஷ்மியை ஒரு வேசைக்கு சமதையாகத்தான் எண்ணவேண்டும். ஏனென்றால், அவள் பணமுள்ளவனிடமே போகிறாளன்றி ஏழையிடம் போகிறதில்லையல்லவா. ஆகையால், ஒருவனுக்குப் பணமிருந்தால், அவனுக்கு ஜெயமங்கை வசியமாகி நாய்போலப் படிந்து அவன் சொல்படி நடந்துகொள்வது நிச்சயம். ஜெயம் பெறுவதற்கு நீங்கள் சொல்லும் குணங்கள் அவசியம் வேண்டுமென நான் நினைக்கவே இல்லை. அது எப்படியாவது இருக்கட்டும். இப்போது நீங்கள் முடிவாக என்ன சொல்லுகிறீர்கள்? நான் எத்தனையோ தினங்களாக வந்து போய்க்கொண்டேதானிருக்கிறேன். நீங்களும் உலையில் வைத்து எதையோ உருக்கிக்கொண்டேதானிருக்கிறீர்கள். ஜெயலக்ஷ்மி என்ற பெண் குகைக்குள்ளிருந்து வெளியில் வரமாட்டே

னென்று ஒவ்வொருநாளும் சொல்லிக்கொண்டேதா னிருக்கிறாள். ஏதாவது காரியம் பலிக்குமா? பலிக்குமென்பதற்கு ஏதாவது ருஜு காட்ட முடியுமா? அல்லது, நாம் சொப்பனத்திலுள்ள வஸ்துவைத் தேடிக்கொண் டலைகிறோமா? உண்மையை முடிவாகச் சொல்லிவிடுங்கள். நான் அடிக்கடி இங்கே வந்து உங்களை வருத்தாமல் ஒரேயடியாய் நின்று விடுகிறேன்" என்று முற்றிலும் கசப்பாகப் பேசினார். அவர் பேசியமாதிரி, ஒரு சிஷன் குருவினிடம் பேசுவதைப்போல் இல்லாமல், எஜமானன் வேலைக்காரனிடம் பேசுவதுபோல அதிகாரத் தோரணையாக இருந்தது. அவ்வாறு பேசியவுடனே செட்டியார் அலுத்துப் போனவர்போல விசிப்பலகையின்மேல் உட்கார்ந்து கொண்டார்.

அவரது வார்த்தைகள் கூர்மையான அம்புகள் போலப் பாய்ந்தனவானாலும் வாகடச் சாமியார் அதனால் சிறிதும் கலங்காதவராய்ப் பொறுமையாகவும் நிதானமாகவும் இருந்தபடி விசிப்பலகையிலிருந்த செட்டியாரைப் பார்த்து நிரம்பவும் கிலேசத்தோடு புன்னகை செய்தவராயும், அவரது கோபத்தை சமனப்படுத்த முயல்பவர் போலவும் பேசத்தொடங்கி "செட்டியாரைய்யாவுக்கு இன்றையதினம் இவ்வளவு கோபம் உண்டாகக் காரணமென்ன! இதுவரையில் பொறுத்தது பொறுத்தீர்கள். இப்போது காரியம் கைகூடும் சமயத்துக்கு வந்திருக்கிறது. இதோ வெண்ணெய் திரளப் போகிறது. எடுத்து நீங்கள் சாப்பிடப் போகிறீர்கள். அப்படி இருக்க, நீங்கள் ஆநந்தக் கடலிலாழ்ந்து சந்தோஷமாக இருக்கப் போகும் சுபவேளையில் நீங்கள் கோபிப்பது சகுனத்தடை யென்பதை உங்களுக்கு நான் சொல்ல வேண்டுமா? இந்தக் காரியம் பலிக்குமா, பலிக்காதா என்று நீங்கள் இன்னமும் சந்தேகப் படுவது போலப் பேசுகிறீர்களே! காரியம் அவசியம் பலிதமடையும். ஜெயலக்ஷ்மி என்ற தேவடியாள் அதோ கொஞ்சதூரத்தில் நின்று சிரித்துக்கொண் டிருக்கிறாள். இன்னும் சொற்ப பிரயாசையில், அவள் நமக்குப் பக்கத்தில் வந்து ஆநந்தத் தாண்டவமாடி உங்களை சுவர்க்கபோகத்தில் வைக்கப்போகிறாள். இதுவரையில் இந்த உலகத்தில் வேறு எவரும் கண்டுபிடிக்காத புதுமையை நாம் இதோ கண்டுபிடிக்கப் போகிறோம். மார்க்கண்டேயனைப்போல, நாமும் எமனை வென்றுவிடப் போகிறோம். ஏன் அநாவசியமாக நீங்கள் கவலைப் படுகிறீர்கள்? இன்னம் கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள்,

பொறுத்தார் பூமி ஆள்வார் என்ற பழமொழி ஒருநாளும் பொய்யாகாது" என்று நிரம்பவும் உண்மையாகப் பேசினார்.

அவரது அழுத்தந்திருத்தமான வார்த்தைகளைக் கேட்டு, அவரது உறுதியான முகத்தோற்றத்தைக் கண்ட செட்டியார் உடனே ஒருவித நம்பிக்கையும், ஆவலும், மகிழ்ச்சியும் கொண்டவராய்ச் சடேரென்று எழுந்து கணப்புச்சட்டியண்டை வந்து "அப்படியானால், அமிர்தசஞ்சீவி சீக்கிரம் கிடைக்குமென்று சொல்லுகிறீர்கள்? எங்கே இப்போது எப்படி இருக்கிறதென்று பார்க்கிறேன்," என்று கூறியவண்ணம் கணப்புச்சட்டியண்டை நின்று குனிந்து குகையைப் பார்க்க, உடனே சாமியார் "நீங்கள் இதற்குள் பார்த்தால், இப்போது என்ன தெரியப்போகிறது? ஒன்றும் தெரியாது. இதற்குள் போடப்பட்டிருக்கும் மருந்துகளும் அவற்றில் கலந்திருக்கும் மூலிகைகளின் சாறும் ஒன்றுகூடித் திரண்டு உருகி ஒன்றுபட்டு இறுகி ஒரு குளிகையாக மாறும். அதை யெடுத்து நாம் அப்போதைக்கப்போது இன்னொரு மூலிகைச்சாற்றில் இழைத்து உட்கொள்ள வேண்டும். அப்படி உட்கொண்டால், உடனே மனிதனுடைய மூப்பு, பிணி எல்லாம் நீங்கிவிடும். அவன் பாலியப்பருவ முடையவன்போல மாறிவிடுவான். அதன் பிறகு அவனுக்கு இறப்பு பிறப்பு என்ற மாறுபாடே கிடையாது. அவன் என்றும் சிரஞ்சீவியாகவே இருந்து, அமிர்தமுண்ட இந்திராதி தேவர்கள்போல, சகல போகங்களையும் அநுபவித்துக்கொண்டு பூலோகத்திலேயே சுவர்க்கபோகத்தில் இருக்கலாம். இந்த அமிர்த சஞ்சீவி வானவர்களுடைய தேவாமிருதத்துக்கு சமமானது. தேவாமிருதத்தைக் கடைந்தெடுக்க, முப்பத்துமுக்கோடி தேவர்களும், அசுரர்களும், இன்னும் போதாததற்கு மும்மூர்த்திகளும் சேர்ந்து எத்தனையோ அபாரமான ஏற்பாடுகளைச் செய்து எவ்வளவுகாலம் பாடுபட்டு சமுத்திரத்தைக் கடைந்தார்கள். அவர்களுக்குக்கூட அமிர்தம் உடனே உண்டாகிவிடவில்லை. சர்வ வல்லமையுள்ள தேவாதிதேவர்களுக்கே காலகோடி விஷமாகிய பெருத்த இடையூறு குறுக்கிட்டதே! அப்ப்டி இருக்க, அற்ப மனிதனாகிய நான் ஒருவன் யாதொரு உதவியுமின்றித் தனியாக இருந்து ஜீவாமிருதம் கடைந்தெடுப்பதென்றால், அது மகா அருமையான காரியமல்லவா! என் திறமையை நீங்கள் அபாரமாக மெச்சுதவற்குப் பதிலாக என்னை இகழ்வது நியாயமாகுமா? தேவர்களாவது விஷத்

தோடு அமிர்தம் கடைந்தெடுத்தார்கள். நான் விஷமில்லாத சுத்த சுயம்புவான சஞ்சீவியை எடுக்கப் போகிறேன். காலதாமதமாகிய அந்தப் பெரிய இடையூறு ஒன்றுதான் நம்மை விஷம்போல வருத்துகிறது. அவ்வளவே தவிர நமக்கு ஜெயம் உண்டாவதைப்பற்றிக் கொஞ்சமும் சந்தேகமே தேவையில்லை. இன்னம் கொஞ்சம் பொறுங்கள். அதோ பாருங்கள். மருந்துகள் அநேகமாகத் திரண்டு மணிபோல உருட்சியடைந்து கொண்டிருக்கிறது'' என்றார்.

அவரது தேன்போன்ற சொற்களைக் கேட்கவே, செட்டியாரது மனம் முற்றிலும் நம்பிக்கை கொண்டது. முகம் சந்தோஷத்தினால் மலர்ந்தது. அவரது தேகம் பூரித்துப் பரவசமடைந்தது. அவர் குகைக்குள்ளிருந்த பொருட்களை உற்று நோக்கியவண்ணம் "இந்த மணியைத் தயாரிக்க ஆயிரத்தெட்டு முறை சுருக்குக் கொடுத்து உருக்கவேண்டுமென்று சொன்னீர்களே. இன்றோடு அந்தக் கணக்கு முடிவடைகிறதல்லவா? இன்றையதினம் நான் திரும்பி வீட்டிற்குள் போவதற்கு முன், அந்த அமிர்தம் எனக்குக் கிடைக்குமா? அதைச் சாப்பிட்டால், நீங்கள் சொன்னபடி மனிதன் என்றும் சிரஞ்சீவியாக இருக்க முடியுமா? நான் நல்ல யௌவனப் பருவமடைந்து விடுவேனா?'' என்றார்.

சாமியார் "ஆய்விட்டது. இனி என்ன பாக்கி இருக்கிறது. இன்றோடு ஆயிரத்தெட்டாவது உருக்கு முடிகிறதென்றே நினைக்கிறேன். ஆனாலும் நான் மொத்தம் போட்டுக்கொண்டு வந்தது சரியோ இல்லையோ என்ற சந்தேகம் கொஞ்சம் இருந்துகொண்டிருக்கிறது. ஆகையால் இந்தத் தடவையோடு காரியம் பலிதமடையாவிட்டால், இன்னம் இரண்டொருதரம் அதிகமாகவே உருக்கிப் பார்த்துவிட்டால், போகிறது. இவ்வளவுதூரம் பாடுபட்ட நமக்கு அது ஒரு பொருட்டல்ல. அதனால், இன்னம் இரண்டொரு நாள்தான் தாமதமாகப் போகிறது. அதைப்பற்றி நாம் கவலைப்படவாவது, மனத்தளர்ச்சியடையவாவது கூடாது. ஒரு மனிதனுடைய ஆயிசுகாலத்தில் இரண்டொருநாள் காலம் ஒரு பிரமாதமா? அதிலும், இது நம்மை சிரஞ்சீவி ஆக்கத்தக்க மகா பெரிய விஷயம். இதில் நாம் சோம்புதல் கூடவே கூடாது. இந்த அமிர்தசஞ்சீவியின் குணம் என்னவென்று தெரிந்துகொள்ள நீங்கள் பிரியப்படுகிறதாகத் தெரிகிறது. மனிதருடைய உடம்பில் வாத, பித்த, சிலேஷ்மமென்ற

மூன்று வஸ்துக்கள் அதனதன் அளவுப்படி சரியாக இருந்தால் மனிதன் ஆரோக்கியமாகவும் திடகாத்திரமும் நீண்ட ஆயுளுமுடையவனாகவும் இருக்கிறான். மனிதன் பிறந்த முதல் சுமார் முப்பது வயதுவரையிலும் அந்த மூன்று தாதுக்களும் அதனதன் அளவுப்படி இருந்து மனிதனை வளர்த்துக் காப்பாற்றுகிறது. அதன்பிறகு, அவனவன் உண்ணும் உணவினாலும், செய்யும் செய்கைகளினாலும், அவைகள் நிறைதப்பிப் பலவகையான பிணிகளையும் பலஹீனத்தையும் உண்டாக்கி, முடிவில் மரணத்தை உண்டாக்கி விடுகின்றன. ஆகையால் வாதம், பித்தம், சிலேஷ்மமாகிய மூன்று தாதுக்களும் அதனதன் அளவை மீறாமல் சரியானபடி வைக்க நாம் ஒரு மருந்தைக் கண்டுபிடித்து அதையே ஆகாரமாக உண்டு வந்தால், மனிதனுக்குப் பிணியென்பதே உண்டாகாது. அவனுக்கு மூப்புமில்லை; சாவுமில்லை. நான் தயாரிக்கும் இந்த ஜீவாமிருத மணியை நான் முன்னே சொன்னபடி தினம் உபயோகித்து வந்தால், மூப்பு, பிணி முதலியவை உடனே விலகிப்போம். ஆயிசு வளர்வதும் நிச்சயம். இப்படிப்பட்ட நிகரற்ற அமிர்தத்துக்கு எவ்வளவு பொருள் கொடுத்தாலும் நிகராகுமா?'' என்றார்.

செட்டியாரினது நாவில் அப்போதே ஜலம் ஊறியது. ஆசைப் பேய் அவரது தலைக்கு ஏறியது. ஆவலென்னும் அக்கினியால் அவரது தேகம் தகிக்கப்பட்டுக் கருகியது. அவர் சாமியாரைப் பார்த்து "நீங்கள் இதை அநுபவ பூர்வமாக ருஜுப்படுத்திக் காட்டுவீர்களா?'' என்றார்.

சாமியார் "அநுபவத்துக்குக் கொண்டுவராத வித்தை என்ன வித்தை! இதன் பலனை நாம் அநுபவித்துப் பார்க்காவிட்டால், நாம் ஏன் இவ்வளவு பாடுபடவேண்டும்? இந்த மருந்து தயாரானவுடனே இதை முதலில் நானே சாப்பிட்டு உங்களுக்குப் பரீட்சை காட்டுகிறேன். அதன்பிறகு நீங்கள் சந்தேகமே கொள்ளமாட்டீர்கள்,'' என்றார்.

அவ்வாறு அவர்கள் சம்பாஷித்துக் கொண்டிருந்த சமயத்தில் அந்தச் சத்திரத்தின் பின்புறத்தில் எங்கேயோ இருந்த ஒரு கதவின் சங்கிலி கலகலவென்று அசைந்த ஓசை உண்டாயிற்று.

அதைக் கேட்ட சாமியாரது உடம்பு திடுக்கிட்டு இரண்டொருதரம் அசைந்தது. அவரது திருஷ்டி ஓசையுண்டான பக்கத்தில்

தானாகவே திரும்பியது. அவரது முகம் மாறுபட்டது. அதுபோலவே செட்டியாரும் ஒருவித திகைப்பும், கலக்கமும் அடைந்தாராயினும், அவரது முகம் அவ்வளவாகக் கவலையைக் காட்டவில்லை. அவர் சாமியாரை நோக்கி "ஏன் சங்கிலி அப்படி அசைகிறது? மனிதர் அசைக்கிறதுபோலல்லவா இருக்கிறது? உங்களுடைய தவசிப் பிள்ளை எங்கே காணோம்?" என்றார்.

சாமியார் "என்னுடைய தவசிப்பிள்ளையை ஊருக்குள் அனுப்பி இருக்கிறேன். விளக்கிற்கு எண்ணெய் இல்லை. கொஞ்சம் வாங்கிக்கொண்டு வருவதற்காகப் போனான். ஒருவேளை அவன் தான் வந்து சங்கிலியை அசைக்கிறானோ என்னவோ தெரியவில்லை" என்றார்.

செட்டியார்:—அவன் வந்தால், வாசல் வழியாக அல்லவா வருவான்; பின்பக்கத்தின் வழியாக வரவும் மாட்டான்; சங்கிலியை இப்படிக் குலுக்கவும் மாட்டானே; இது சம்சயமான ஓசையாக இருக்கிறதே!

சாமியார்.—ஆம். வாஸ்தவம். சங்கிலி ஒரு வேளை காற்றினால் அப்படி அசைந்தாலும் அசைந்திருக்கலாம். அல்லது இந்தப் பாழும் சத்திரத்தில், பேய் பிசாசுகள் ஏராளமாக அடைந்திருக்கின்றனவென்று ஜனங்கள் சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஒருவேளை அவைகளுடைய சேஷ்டையினால் சங்கிலி அசைந்ததோ என்னவோ! அப்படியும் இல்லையானால், யாராவது வழியோடு போகிறவர்கள் குறும்புக்காக அசைத்தாலும் அசைத்திருக்கலாம். அது எப்படியாவது இருந்துவிட்டுப் போகட்டும்; நாம் நம்முடைய அலுவலைக் கவனிப்போம்—என்றார்.

அதைக் கேட்ட செட்டியார் "சரி; அது எப்படியாவது இருக்கட்டும். இது இன்றையதினம் முடிவடையாதுபோலிருக்கிறது. நீங்கள் உருக்கிக் கொண்டிருங்கள். எனக்கு நேரமாகிறது. நான் போய்விட்டு மறுபடி நாளையதினம் சாயுங்காலம் இதே வேளைக்கு வருகிறேன். அதற்குள் காரியத்தை முடித்து ஆயத்தமாக வைப்பீர்களென்று நம்புகிறேன்" என்று கூறியவண்ணம் எழுந்து வெளியில் நடக்கத் தொடங்கினார்.

அந்த ஏற்பாட்டை ஒப்புக்கொண்ட சாமியார் "சரி; அதுதான் நல்லது; அப்படியே செய்யுங்கள். உங்களை அநாவசியமாகக் காக்கவைக்க எனக்கும் இஷ்டமில்லை" என்று கூறியவண்ணம் எழுந்து அவரை வழியனுப்ப, இருவரும் புறப்பட்டு முன்கட்டிற்கு வந்து வாசற்கதவை யடைந்தனர். செட்டியார் வெளியில்போய்த் தமது குதிரையின் கட்டை அவிழ்த்து அதன்மேல் ஏறிக்கொண்டு சாமியாரிடம் செலவுபெற்றவராய்ச் செல்லலானார்.

சாமியார் உடனே கதவை மூடிக்கொண்டு முதல் கட்டைக் கடந்து இரண்டாங்கட்டை யடைந்து விசிப்பலகையின்மேல் உட்கார்ந்தார். உட்கார்ந்தவர் உடனே சிந்தனையி லாழ்ந்து அடியில் வருமாறு தமக்குள் எண்ணமிடலானார். "இந்த மூன்று மாசகாலமாக, நானும் இந்த மனிதருக்கு சாக்குப் போக்குகளும் சமாதானங்களும் சொல்லிக்கொண்டே வந்திருக்கிறேன். இதுவரையில் பொறுமையோடிருந்த மனிதர் இப்போது சில தினங்களாகத் தம்முடைய பொறுமையை இழந்து கசப்பான வார்த்தைகளைப் பேசத் துணிந்துவிட்டார். இவ்வளவு பாடுபட்டு, கடைசியில் இப்போது இவரை நான் எளிதில் விட்டுவிடுவதும் மூடத்தனம். இவர் நல்ல முதல்தரமான காவைப் பசு. மனிதரை சிரஞ்சீவியாக்கும் அமிர்தசஞ்சீவியை நான் தயாரித்து இவருக்குக் கொடுத்துவிட்டால், இவரிடம் குறைந்தது ஒரு லக்ஷம் ரூபாயாவது வாங்கிக்கொண்டு கம்பி நீட்டிவிடலாம். அமிர்தசஞ்சீவி தயாரிப்பது ஒரு பெரிதல்ல. அதை நானே முதலில் சாப்பிட்டு யௌவனப் பருவமுடையவனாக மாறி அவருக்குக் கண்கூடாகக் காட்டவேண்டும். காட்டிவிட்டால், அவர் உடனே பணங் கொடுத்துவிட்டு மருந்தை வாங்கிக் கொண்டு போய்விடுவார். நானும் உடனே புறப்பட்டு என்னுடைய சுயதேசமாகிய கும்பகோணத்துக்கு ஓடிப்போய் விடலாம். இதையெல்லாம் உத்தேசித்து நான் ஒரு தந்திரம் செய்ய எண்ணி, கும்பகோணத்திலுள்ள என் தம்பி சொக்கலிங்கத்துக்கு ஒரு கடிதம் எழுதினேன். எனக்கு உடம்பு அசௌக்கியமாக இருப்பதால், நான் அவனைப் பார்க்கப் பிரியப்படுகிறேனென்றும், உடனே புறப்பட்டு இங்கே வரவேண்டுமென்றும் நான் கடிதம் எழுதினேன். அவனும் நேற்றையதினம் வருவதாக மறுமொழிக் கடிதம் எழுதினான். நேக்றையதினமும் கழிந்தது; இன்றையதினமும் கழிந்தது. அவன் இன்னமும் வந்து சேரவில்லை. அவனுடைய கடிதத்தை நம்பி, நேற்றையதினமே அமிர்தசஞ்சீவியின் சக்தியை மெய்ப்பித்துக்

காட்டுகிறேனென்று இவருக்கு வாக்குக்கொடுத்திருந்தேன். அவன் வாராமையால், என் வாக்குறுதியும் தவறிப்போய்விட்டது. செட்டியாரும் என்மேல் கடுங்கோபம் கொள்ளுகிறார். அந்த மூடன் நாளைக்காவது வந்தால், காரியம் சுலபத்தில் முடிந்துபோகும். இந்தத் தேசத்திலுள்ள கட்சிப் பிரதிகட்சிகளில் நான் சம்பந்தப்பட்டு அநாவசியமான சங்கடங்களுக்கு ஏன் ஆளாகவேண்டும். இந்த ராஜ்ஜியத்தை ராமன் ஆண்டாலென்ன? ராக்ஷசன் ஆண்டாலென்ன? ஒரு லக்ஷம் ரூபாயையும் சுருட்டிக்கொண்டு இந்தத் தரித்திரம் பிடித்த ஊரை விட்டு இரவோடிரவாய் ஓடிப்போவதே புத்திசாலித்தனம். எல்லாவற்றிற்கும் அந்தப் பாழும் சொக்கலிங்கம் வரவில்லையே. அவன் பார்வைக்கு என்னைப்போலவே இருக்கிறானென்றும், நானும் அவனும் ஓரே அச்சில் கடைந்தெடுக்கப்பட்ட இரட்டைப்பிள்ளைகளோ வென்றும், இருவருக்கும் கொஞ்சமாவது வித்தியாசம் இல்லையென்றும், ஜனங்கள் அடிக்கடி சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனால் எனக்கு வயசு நாற்பத்திரண்டாகிறது. என் தம்பிக்கோ வயசு இருபத்தைந்தாகிறது. அவன் வடிவத்தில் என்னைப்போலவே இருக்கிறானாலும், அவனிடம் யௌவனப்பருவத்து முறுக்கும், அழகும், களையும் நிரம்பவும் பொருந்தி இருக்கின்றன. என் முகத்திலோ, கிழடு தட்டுகிறது. ஆகையால், இந்தச் செட்டியாருக்கெதிரில் நான் இந்த அமிர்தசஞ்சீவியைக் குடித்துவிட்டு அப்பால் போய் மறைந்துகொண்டு உடனே என் தம்பியை அவருக்கு முன்னால் அனுப்பினால், அவர் முற்றிலும் பிரமித்து ஏமாறிப்போய், நான்தான் யௌவனப் பருவமடைந்து விட்டதாக எண்ணிக்கொண்டு உடனே பணத்தைக் கொடுத்துவிடுவார். ஆனால் என் தம்பி நன்றாகப் படித்தவன்; பெரிய வேதாந்தி. அவன் இந்த மோசக் கருத்துக்கு உடன்படுவானோ என்னவோ; அவனிடமும் நான் தந்திரமாக நடந்து அவனைக்கொண்டு இந்தச் செட்டியாரை ஏமாற்றிவிட்டுப் போய்விட வேண்டும்" என்று பெரிய சொக்கலிங்கம் பிள்ளை எண்ணமிட்டிருக்க, அதே க்ஷணத்தில் ஓட்டின்மேலிருந்து ஒரு மனிதன் பொத்தென்று முற்றத்தில் குதித்தான் அதைக் கண்ட சாமியார் திடுக்கிட்டு எழுந்து உற்று நோக்க, அவ்வாறு குதித்த மனிதன் அருவருப்பான புன்னகை செய்தவனாய்க் கூடத்திற்கு வந்து சேர்ந்தான். அவன் சுமார் 35-வயதடைந்தவனாகக் காணப்பட்டான். அவனது முகம் வேங்கைப் புலியின் கொடிய

முகம்போல நிரம்பவும் பயங்கரமாக இருந்தது. அவன் பீமனோ கடோத்கஜனோ வென்று ஐயுறும்படி பெருத்த குண்டோதரனாக இருந்தான். அவனது கைகால்களெல்லாம் எஃகினாலான உலக்கைகள் போலவே இருந்தன.

அவ்வாறு தோன்றிய அரக்கனைக் கண்ட நமது சாமியார் ஒருவாறு அஞ்சிக் கலங்கினாரானாலும், தமது மனநிலைமையை வெளியில் காட்டிக் கொள்ளாமல் அடக்கிக்கொண்டு நிதானமாகவே காணப்பட்டு "ஓகோ சாமுண்டியா! வா அப்பா! கொஞ்ச நாழிகைக்கு முன் சங்கிலியை உலுக்கினது நீதானோ! வா; இப்படி விசிப்பலகையில் குந்து" என்று அன்பாகக் கூறி உபசரித்தார்.

அதைக் கேட்ட சாமுண்டி கோபப் புன்னகை செய்து "நான் சங்கிலியை அசைத்தது உனக்கு அநுகூலமாகத்தானே இருந்தது. நான் வருகிறேனென்பதை உணர்ந்து, நீ ஆசாமியை உடனே வெளியில் அனுப்பி விட்டாயல்லவா! அதுதான் சாமர்த்தியம். இன்றையதினந்தான் உன்னுடைய திருட்டுத்தனம் வெளிப்பட்டது. நீ இப்படி நடந்துகொள்வாயென்று நான் இதுவரையில் கொஞ்சமும் சந்தேகப்படவே இல்லை. நீ பெரிய மோசக்காரனென்பது பட்டப் பகல்போல வெளியாய்விட்டது." என்றான்.

சாமியார் :— (நயமாகவும் பணிவாகவும்) என்னப்பா! சாமுண்டி! ஏன் இப்படிக் கோபித்துக் கொள்ளுகிறாய்? திருட்டென்கிறாய்? மோசமென்கிறாய்! எனக்கு ஒன்றும் நன்றாக விளங்கவில்லையே!

சாமுண்டி:—(புரளியாகப் பேசத்தொடங்கி) சொக்கலிங்கம்! உன்னை நான் நெடுநாளாக அறிவேன். இப்போது இங்கே வந்துவிட்டுப்போன செட்டியார் இன்னார் என்பதையும் நான் நன்றாக அறிவேன். ஏன் எனக்குக் காது குத்துகிறாய்? எனக்குக் காதுகுத்தி பல வருஷமாகி விட்டதென்று நினைத்தோ?

சொக்கலிங்கம்:—என்ன சாமுண்டி! இன்றையதினம் இப்படிப் பேசுகிறாயே! என்னைப்பற்றி நீ தெரிந்துகொண்ட புது விஷயம் என்ன? இங்கே வந்துவிட்டுப் போனவருடைய பெயர் புட்டண்ண செட்டியாராம். அவர் என்னிடம் வைத்திய சம்பந்தமாக வந்துவிட்டுப் போகிறார். மற்றப்படி உண்மையில் அவர் இன்னார் என்பது எனக்குத் தெரியவே தெரியாது—என்றார்.

அதைக் கேட்ட சாமுண்டி முன்னிலும் அதிக ஆத்திரமாகவும் புரளியாகவும் பேசத் தொடங்கி "பிள்ளையவாள் இப்போதுதான் நேரில் ஆகாசத்திலிருந்து குதித்தவர்போலப் பேசுகிறார்போலிருக்கிறது; இந்த ஊரில் இருப்பவர்போலப் பேசவில்லை. இப்போது வந்து போனவர் இன்னார் என்பது உறுதியாக உனக்குத் தெரியாதா? நீ இவரை இதற்குமுன் பார்த்ததில்லையா?" என்று அருவருப்பாகக் கூறினார்.

உடனே சொக்கலிங்கம்பிள்ளை "ஐயோ! நான் இவரை இதுவரையில் பார்த்ததே இல்லையே! பார்த்திருந்தால், நான் உன்னிடம் அதை மறைத்துப் பேசுவேனா? உண்மையில் இவர் யாரென்பது எனக்குத் தெரியவே தெரியாது. நீ இப்போது சொன்னால் தெரிந்துகொண்டு அதற்குத் தகுந்தபடி இனிமேல் ஜாக்கிரதையாக நடந்துகொள்ளுகிறேன்" என்றார்.

சாமுண்டி "ஆகா! எவ்வளவு சாமர்த்தியமப்பா! ஒன்றும் தெரியாத பைத்தியக்காரன் போலப் பேசுகிறாயே! இவன் மைசூர் திவானென்பது ஒரு குருடனுக்குக்கூடத் தெரியுமே; அப்படி இருக்க, எங்களையெல்லாம்விடப் பதினாயிரமடங்கு அதிக சூட்சும புத்தியுடைய குள்ளநரியான உனக்குத் தெரியாமல் போய்விட்டதா? இந்த ஊர் மகாராஜாவையும், அவனுடைய அத்தானான இந்த திவானையும் பார்க்காத மனிதரும் இந்த மைசூர் சமஸ்தானத்திலிருக்கிறார்களா? நீ பேசுவது நிரம்பவும் ஆச்சரியமாகவே இருக்கிறது! நம்முடைய கட்சியைச் சேர்ந்தவர்களில் சிலர் உன்னைப்பற்றி சந்தேகப் பட்டார்கள். அது நிஜமாகிவிட்டது. நீ யோக்கியன்போல இருந்தே எல்லோரையும் காட்டிக் கொடுத்து விடுவாயென்று அவர்கள் சந்தேகித்துப் பலதடவைகளில் என்னிடம் பிரஸ்தாபித்திருக்கிறார்கள். அதை நான் நம்பாமலிருந்தேன். இப்போது நான் நேருக்குநேர் உண்மையைக் கண்டுவிட்டேன். இந்த மனிதரோடு இவ்வளவு அன்னியோன்னியமாகப் பழகும் நீ நம்முடைய ரகசியத்தை இவனிடம் சொல்லாமலிருக்க முடியுமா? ஒரு நாளும் முடியாது. இந்த ராஜ்யத்து மகாராஜன் அக்கிரமம் செய்கிறானென்று குடிகளெல்லோரும் கலகம் செய்ததனால், ஐம்பது வருஷத்துக்குமுன் வெள்ளைக்காரர்கள் இந்த நாட்டைப் பிடுங்கிக் கொண்டார்கள். மறுபடியும் அவர்களுக்கு ஏதோ தயை பிறந்ததனால் ராச்சியத்தை இப்போதிருக்கும் மகாராஜனிடம் ஒப்புவித்து இன்னமும் சரியாக ஒரு வருஷகாலங்கூட ஆகவில்லை. இந்த சொற்பகாலத்துக்குள் இந்த மகாராஜாவும் அவனுடைய அத்தானான இந்த திவானும் சேர்ந்து மறுபடியும் அக்கிரமம் செய்யத் துவக்கிவிட்டார்கள்; பல ஜெமீந்தார்களுடைய ஆதீனங்களையெல்லாம் பிடுங்கித் தங்களுக்கு வேண்டிய சிநேகிதர்களுக்கெல்லாம் சன்மானமாகக் கொடுத்து விட்டார்கள்; நம்முடைய கூட்டாளிகள் பலருக்கும் பெருத்த பெருத்த தீங்கிழைத்து விட்டார்கள். அப்படிப்பட்ட துஷ்டர்களைத் தொலைப்பதற்கு நாம் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறோமென்பது உனக்குத் தெரியும். நீயும் மகா யோக்கியன்போல வந்து எங்களோடு கலந்துகொண்டு எல்லாவிஷயங்களையும் தெரிந்துகொண்டு, வாகடம் செய்யும் முகாந்திரத்தை வைத்துக் கொண்டு அந்த திவானை வரவழைத்து விஷயங்களை வெளியிடுவதாகச் சொல்லி, அவனிடம் ஏதோ பணம் பறிக்க நீ எண்ணுகிறாயென்பது நன்றாகத் தெரிகிறது. ஆகையால் உன்னை நாங்கள் இனி சுயேச்சையாக இருக்கவிட்டால், நீ எங்கள் தலைக்கெல்லாம் உலை வைத்துவிடுவாயென்பது நிச்சயம்" என்று நிரம்பவும் மூர்க்கமாகவும், வெறிபிடித்தவன் போலவும் கூறிக் கர்ச்சித்தான்.

அதைக் கேட்ட சொக்கலிங்கம் பிள்ளை ஒருவாறு கோபமடைந்தார். அவரது முகம் கருத்தது. அவர் பதைபதைப்பாகப் பேசத் தொடங்கி "என்ன சாமுண்டி! பேச்சை அதிகமாக ஓட்டுகிறாய்! போனால் போகிறதென்று நானும் இதுவரையில் பொறுத்தேன். நான் இந்த மனிதரை இதுவரையில் பார்த்ததில்லையென்று சொல்லிக் கொண்டே இருக்கிறேன். நீ உன்னுடைய புத்தியையே காட்டுகிறாயே! இந்த மனிதர் தம்முடைய பெயர் புட்டண்ண செட்டியார் என்று சொல்லி என்னிடம் வாகட விஷயமாக வந்து போய்க்கொண்டிருக்கிறார்! நீ சொல்லுகிறபடி இவர் திவானாக இருந்தால்தானென்ன? வாகட விஷயமாக நான் ஓர் அபூர்வமான ஔஷதம் தயாரிக்கிறேன். அதற்கு அவர் ஆயிரக்கணக்கில் பணம் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார். நான் உங்களுடைய கட்சியில் சேர்ந்திருந்தால் ஏதாவது ஒரு தொழில் செய்து பணம் சம்பாதிக்கக் கூடாதா? நம்முடைய விரோதியிடத்தில்தான் பணம் சம்பாதிக்கக் கூடாதா? நான் நியாயமான வழியில்தானே ஒரு தொழில் செய்கிறேன். நான் இந்தச் செட்டியாரிடம் நம்முடைய ரகசியங்களையெல்லாம் சொல்லிவிட்டேனென்

பதை நீ ருஜூப்படுத்த முடியுமா? நான் இவரிடம் பேசியதை நீ கேட்டுக்கொண் டிருந்தாயா? ஒன்றையும் நிச்சயமாகத் தெரிந்துகொள்ளாமல் நீ யூகத்தின்மேல் தாறுமாறாகப் பேசுகிறாயே! அப்படி என்ன நான் அயோக்கியனா? பிறருக்கு மோசம் செய்கிறவனா? அல்லது, உன்னைப்போல, வழியில் யாராவது பிரயாணிகள் தனியாகப்போனால் அவர்களிட மிருப்பதையெல்லாம் பிடுங்கிக்கொண்டு அவர்களை ஓட்டி விடுகிறவனா? எந்த அநுமானத்தை வைத்துக்கொண்டு நீ என்னைப் பற்றி சந்தேகித்து அவதூறான வார்த்தைகள் சொல்லுகிறாய்" என்றார்.

அதைக் கேட்ட சாமுண்டி ரௌத்திராகாரமான கோபங்கொண்டு "அடேய்! என்ன சொன்னாய்! நானா வழியில் போகிறவர்களைக் கொள்ளை யடிக்கிறவன்? அப்படி நான் செய்ததை நீ நேரில் பார்த்திருக்கிறாயா? எப்போதடா பார்த்தாய்? அடேய் அயோக்கிய சிகாமணியே! எல்லோரும் மறைந்திருந்து திருடினால், நீ மனிதனை நம்ப வைத்துக் கண்ணுக்கெதிராகவே கொள்ளையடிக்கிற பக்காத்திருடனாயிற்றே! அப்படி இருக்க, நீ பரிசுத்தம் பேசுகிறாயோ! இருக்கட்டும். இப்போதே நானாக எதையும் முடிவு கட்ட எனக்கு இஷ்டமில்லை. எல்லாவற்றையும் நான் நம்முடைய கூட்டாளிகளிடம் தெரிவிக்கிறேன். அவர்கள் தீர்மானிக்கிறபடி நடந்து கொள்ளலாம்" என்றான்.

சொக்கலிங்கம் பிள்ளை நிரம்பவும் சாவதானமாகப் பேசத் தொடங்கி "அப்பா சாமுண்டி! அதுதான் சரியான காரியம்; அப்படியே செய். நான் நேரில் வந்து என்னுடைய நியாயத்தை அவர்களிடம் எடுத்துச் சொல்லி அவர்களைத் திருப்திப் படுத்துகிறேன். அதுவரையில் நீ உன்னுடைய கோபத்தை அடக்கிக்கொள். இப்படி விசிப்பலகையில் வந்து உட்கார். வேப்பம் பட்டை, வேலம்பட்டை முதலியவைகளி லிருந்து நல்ல முதல்தரமான சாராயம் இன்றைய தினம் காய்ச்சினேன். அது நிரம்பவும் மதுரமாக இருந்ததைக்கண்டு, நீ வந்தால் உனக்குக் கொடுக்கலா மென்று எண்ணிக் கொஞ்சம் மிச்சம் வைத்திருக்கிறேன். அதையும் ஆநந்தமாகக் குடித்துவிட்டுப் புறப்பட்டுப் போகலாம்" என்று அந்தரங்க விசுவாசத்தோடு கூறினார்.

சாராயம் என்ற சொல்லைக் கேட்டவுடனே சாமுண்டி யென்னும் முரடன் ஒருவாறு கோபசமன மடைந்தவனாய் விசிப்பலகையின்மேல் உட்கார்ந்துகொண்டு "எங்கே சாராயம்? எடு பார்க்க

லாம்" என்றான். உடனே சொக்கலிங்கம் பிள்ளை எழுந்து அப்பால் போய், ஒரு மூலையில் சுவரின் மாடத்தில் மறைத்துவைக்கப் பட்டிருந்த ஒரு சீசாவை எடுத்துவந்து அதை சாமுண்டியிடம் கொடுத்தார். சாமுண்டி சீசாவை வாங்கி அதன் மூடியை விலக்கி மூக்கில் வைத்து வாசனை பார்த்தான். ஒருவிதமான கொடிய வேகம் வெளிப்பட்டு மூக்கில் தாக்கியது. அதன் வாயை அவன் மறுபடியும் மூடிவிட்டான். அதைக் கண்ட வாகடச் சாமியார், "எப்படி இருக்கிறது பார்த்தாயா? இன்று மத்தியானந்தான் தயார் செய்து முடித்தேன். நல்ல காரமான சரக்காய் அமைந்தது. அதனால்தான் மூக்கில் பிடிக்கமுடியவில்லை. கொஞ்சம் சாப்பிட்டால், போதை எவ்வளவு ஆநந்தமாக இருக்கிறது தெரியுமா? உனக்கு இதில் பிரியம் அதிகமென்று, வேண்டுமென்றே, உனக்காக இதை வைத்திருந்தேன்," என்று அன்பாகப் பேசினான்.

அதைக் கேட்ட சாமுண்டி "அப்படியானால், நான் மாத்திரமா குடிக்கிறது? நீயும் கொஞ்சம் எடுத்துக்கொள். மிகுதியை நான் சாப்பிடுகிறேன்" என்றான்.

சொக்கலிங்கம்பிள்ளை "நான் ஏராளமாகக் குடித்துவிட்டேன். இனி மறுபடியும் சாப்பிட்டால், உடம்பு சுத்தமாகக் கெட்டுப்போகும். எனக்குப் போதும்; நீயே சாப்பிடு" என்றார்.

அதைக் கேட்ட சாமுண்டியின் மனதில் ஒருவித சந்தேக முதித்தது. அவன் சாமியாரிடம் நயமாகப் பேச்சுக்கொடுத்தபடி அவருடைய கவனத்தை வேறிடத்தில் மாற்றியபடி, விசிப்பலகையின் கீழே எப்போதும் சுருட்டி முடக்கிப் படுத்துக்கொண்டே இருக்கும் சொக்கலிங்கம் பிள்ளையின் நாய் இருக்கிறதா வென்று காலால் தடவிப் பார்த்து, சீசாவின் மூடியைத் திறந்து அதை மெதுவாக விசிப்பலகையின் கீழே கொண்டுபோய், அதற்குள்ளிருந்த சாராயத்தில் சிறிதளவு கீழே கவிழ்க்க, அங்கிருந்த நாய் தனது நாவினால், நக்கி அந்த சாராயத்தைக் குடித்துவிட்டது. அதை உணர்ந்த சாமுண்டி சீசாவின் வாயை மூடியால் அடைத்துக் கையில் வைத்துக் கொண்டிருந்தபடி சொக்கலிங்கம் பிள்ளையிடம் பேச்சுக் கொடுத்துக் கொண்டே இருக்க, கால் நாழிகை சாவகாசம் கழிந்தது.

விசிப்பலகையின் கீழே படுத்திருந்த நாய் வீரிட்டு அலறிக் கொண்டு எழுந்து வெளியில் வந்தது. அதைக் கண்ட சொக்கலிங்

கம் பிள்ளையும், சாமுண்டியும் திகைப்பும் வியப்பு மடைந்து எழுந்து நின்று அதை உற்று நோக்கினர். அந்த நாய் தடுமாறித் தத்தளித்து விழுந்து புரண்டு எழுந்து நிற்கப் பார்க்கிறது. கால்கள் உறுதியாக நிற்காமல் துவண்டு போகின்றன. நாய் மரணாவஸ்தைப் படுவது போல விழுந்து புரண்டு ஊளையிட்டு அழுது இரண்டொரு நிமிஷ நேரத்தில் காலைப் பரப்பிக்கொண்டு கீழே விழுந்துவிட்டது. மூச்சு வாயால் வரத்தொடங்கியது. இரண்டு மூன்று இழுப்பின் பிறகு எல்லாம் ஓய்ந்து போய் விட்டது.

அதன் மரணாவஸ்தையைப் பார்த்துக் கொண்டே இருந்த அந்தப் புருஷர் இருவரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர். ஒருவர் மனதை மற்றவர் உள்ளங்கை நெல்லிக்கனி போல அறிந்து கொண்டதாகவும் தெரிந்தது. இருவரும் வாய் திறக்கவுமில்லை. வார்த்தைகள் சொல்லவுமில்லை. அடுத்த க்ஷணத்தில் சாமுண்டி தனது கையிலிருந்த சீசாவை ஓங்கிச் சொக்கலிங்கம் பிள்ளையின் மண்டைக்கு இலக்குப்பார்த்து விட்டெறிந்தான். சொக்கலிங்கம்பிள்ளை அவனது குறிப்பை அறிந்து சடக்கென்று கீழே குனிந்து கொண்டாராகையால், சீசா அவருக்கு மேலாகப் போய் எதிரிலிருந்த சுவரில் மோதி சுக்கல் சுக்கலாக உடைந்து போயிற்று. அதற்குள்ளிருந்த விஷங்கலந்த சாராயம் கூடம் முழுதும் சிதறிப்போயிற்று. சாமுண்டி இரணியனது குடலைப் பிடுங்க ஆயத்தமான உக்கிர நரசிம்மம்போல ஒரு க்ஷணத்தில் மாறினான். தன்னை விஷமிட்டுக்கொல்ல நினைத்த படுமோசக்காரனை சொக்கலிங்கம் பிள்ளையைத் தான் எப்படியும் அன்றையதினம் கொன்றே தீர வேண்டுமென்று அவன் முடிவுசெய்து கொண்டான். அவனது கைகால்கள் முதலிய அங்கங்களெல்லாம் பதறுகின்றன. மீசைகள் துடிக்கின்றன. உள்ளம் கொதிக்கிறது. அன்றோடு சாமுண்டி தன்னைக் கொன்று விடுவானென்பது சொக்கலிங்கம் பிள்ளைக்கும் நன்றாகத் தெரிந்துபோய் விட்டதாகையால், தானும் முனைந்து தனது முழுபலத்தையும் வெளியிட்டு அவனோடு யுத்தம் செய்துபார்த்தே தீரவேண்டுமென்று தீர்மானம்செய்து எந்த நிமிஷத்தில் அந்த மதயானை தன்மீது வந்து பாயுமோவென்று எதிர்பார்த்தவனாய் நெருப்புத் தணல்மீது நிற்பவன்போல நின்று தத்தளித்தான். இரண்டு புலிகள் ஒன்றன்மீதொன்று பாய்வதற்கு முன்னறிகுறியாகப் பதுங்குவதுபோல இருவரும் ஒரு நிமிஷ

நேரம் என்ன நடக்கிறதென்பதை எதிர்பார்த்து நின்றனர். அடுத்த நிமிஷத்தில் ஒருவர்மேல் ஒருவர் பாய, இருவரும் கட்டிப்புரண்டு ஆரவாரம் செய்து, ஒருவரையொருவர் அடித்துக் கடித்து உதைத்துத் துகைத்துக் குத்திக் கலக்கி மேட்டிலும் பள்ளத்திலும் விழுந்து சாமான்களைத் தள்ளி கணப்புச் சட்டியை உதைத்து அப்பால் தள்ளித் தோண்டியை உடைத்து அகோர யுத்தம் புரிந்தனர். சாமுண்டி என்பவன் மதயானைபோலப் பெருத்த சரீரமுடையவனாகவும் அடக்கவொண்ணாத பெருத்த கோபங்கொண்டு தன்னை மறந்தும் போர் செய்தானானாலும், சொக்கலிங்கம் பிள்ளை நல்ல திடசாலியாதலாலும், தமது உயிருக்காக அவர் போர் செய்தாராதலாலும் அவரும் சளைக்காமல் கால் நாழிகைநேரம் வரையில் சண்டையிட்டார். அவரது உடம்பு முழுதும் இரத்தவெள்ளமாக ஓடுகிறது. வியர்வை ஆறாய்ப் பெருகுகிறது. வாயில் நுரை தள்ளுகிறது. உடம்புமுழுதும் நெருப்பாகப் பற்றி எரிகிறது. உயிரோ போய்க்கொண்டிருக்கிறது. பலம் குறைந்துகொண்டே வருகிறது. கைகால்களெல்லாம் தளர்ந்து கட்டிலடங்காமல் போய்விட்டன. சமுண்டியோ இரத்தங்குடித்த புலிபோல அவரது உயிரைக் குடிக்காமல் விடுகிறதில்லையென்று சிம்மகர்ச்சனை செய்கிறான். அப்போது சொக்கலிங்கம்பிள்ளை ஒரு தந்திரம் செய்தார். கீழே படுத்துப் படுத்துப் புரண்டபடியே, சாமுண்டியோடு விசிப்பலகையண்டை சென்று தமது கையை நீட்டி அவ்விடத்திலிருந்த ஒரு சீசாவை எடுத்துத் தமது பல்லால் அதன் மூடியைத் திறந்து, அதற்குள்ளிருந்த அக்கினித் திராவகத்தை சாமுண்டியின் முகத்தில் கொட்டிவிட்டார்.

கொட்டவே சாமுண்டி வெறிகொண்ட ஆண்சிங்கம்போல மாறி “ஹா! கொலைபாதகா! மோசக்காரப் படுபாவி!” என்று வாய்விட்டுக்கூவி ஓலமிட்டலறத் தொடங்கினான். அந்த அக்கினித் திராவகம் அவனது வாயிலும் கழுத்திலும் விழுந்து பற்றிக்கொண்டு அகோரமாக எரியவே, அந்த மரணவேதனையைச் சிறிதும் சகிக்கமாட்டாமல் சாமுண்டி என்பவன் பதறிக்கதறி முன்னிலும் பதினாயிரமடங்கு அதிகரித்த சினமும் வீராவேசமும் கொண்டு சொக்கலிங்கம் பிள்ளை மீது அதி உக்கிரத்தோடு பாய்ந்து, அவரது குரவளையை இரும்புப் பிடியாகப் பிடித்து அழுத்திக்கொண்டு தனது வாயைக் கொடுத்து அவரது இடது காதைக் கடித்து இழுக்க, அது வாயோடு வந்துவிட்டது. சொக்கலிங்கம் பிள்ளை அவனுக்கு மேல் அதிகமாகக் கதறுகிறார்; பதறுகிறார்; ஓலமிடுகிறார்; ஐயோ! “சாமுண்டி! நான் தெரியாமல் செய்துவிட்டேன். என்னைக்காப்பாற்றி விடப்பா! நான் உனக்கு மருந்து போட்டு அக்கினித்திராவகத்தின் எரிச்சல் உடனே

தணிந்து போகும்படி செய்கிறேன். மருந்து இதோ என் கைவசத்தில் தயாராக இருக்கிறது" என்று கெஞ்சி மிகமிக உருக்கமாக நைந்திளகிக் கூறினார்.

சாமுண்டி "முடியாது. முடியாது. நான் உன் உயிரை வாங்கிவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பேன். எனக்கு உன்னுடைய மருந்தும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம்" என்று கூறியவண்ணம் கர்ச்சித்து ஆரவாரம் செய்து அவர் மூச்சு விடமாட்டாமல் அவரது தொண்டையை இறுகப் பிடித்துப் பிடித்து மேன்மேலும் அழுத்திக் கொண்டே இருக்க, திடீரென்று "அதோ சத்தம் கேட்கிறது. ஆள் அதோ இருக்கிறான்." என்று கூறிக்கொண்டு சில மனிதர்கள் விரைவாக அந்தக் கூடத்திற்கு வந்து சேர்ந்தனர். அவர்கள் கையில் பெரிய தீப்பந்த மொன்றைப் பிடித்துக் கொண்டிருந்தனர். அவர்களுள் அறுவர் போலீஸ் உடைகள் தரித்திருந்தனர். சுமார் இருபத்தைந்து வயதுள்ள ஒருவர் சாதாரண உடை தரித்தார். அவர் மற்றவருக்கு முன்னால் வந்து, " ஆள் அதோ இருக்கிறான். குண்டனை இருக்கிறானே, அவன்தான் எங்களை அடித்து எங்களுடைய சொத்துகளை யெல்லாம் பிடுங்கிக் கொண்டது." என்று ஆவேசத்தோடு கூற, அதைக் கேட்ட போலீசார் குபீரென்று பாய்ந்து சாமுண்டியைப் பிடித்துக் கைகளைக்கட்டி விலங்கிட்டனர். அவர்களுள் ஒருவன் " ஓகோ! இவன் கொள்ளைக் கூட்டத் தலைவனான சாமுண்டி அல்லவா! இவன் பேரில் எத்தனையோ வாரண்டுகளிருக்கின்றனவே! பழைய நாளைத் திருடன் அகப்பட்டானே!" என்று கூறினான்.

அதற்குள் கீழே இருந்து எழுந்த நமது சொக்கலிங்கம் பிள்ளை தமக்கு உயிர் போகும் தருணத்தில் தெய்வந்தான் வந்து தம்மைக் காப்பாற்றியதென்று நினைத்து அங்கே வந்திருந்தவர்கள் யாரென்று நிமிர்ந்து பார்க்க, போலீசாரோடு சாதாரண உடை தரித்து வந்திருந்த மனிதர் " என் அண்ணா! இந்தக் கொள்ளைக்காரனிடத்தில் நீங்களும் அகப்பட்டுக் கொண்டீர்களா? கொஞ்சநேரத்துக்கு முன் நானும் என் சிநேகிதர்கள் சிலருமாகப் பாதையோடு வந்து கொண்டிருக்கையில் எங்களை யெல்லாம் அடித்து எங்கள் பொருளையெல்லாம் அடித்துக்கொண்டு இவன் எவ்வளவு சீக்கிரத்தில் இங்கே வந்திருக்கிறான்" என்றார்.

அதைக் கேட்ட வாகடச்சாமியார் " ஆ! தம்பீ சொக்கலிங்கம்! நீயா வந்திருக்கிறாய்! நேற்றைக்கே வருவதாக எழுதி இருந்தாயே!" என்று ஆசையோடும் ஆவலோடும் கூறித் தனது தம்பியைப் பிரியமாக ஆலிங்கனம் செய்து கொண்டார். அவ்வாறு ஆலிங்கனம் செய்து கொண்ட அண்ணனும் தம்பியும் வாலிசுக்கிரீவர்போல இருவரும் ஒருவர்போலவே இருந்ததைக் கண்டு போலீசார் பெரிதும் வியப்படைந்தவராய் நின்றனர்.

புத்தக விளம்பரம்.

ஸ்ரீமான். வடூர்-கி. துரைசாமி ஐயங்கார், அவர்கள் B. A. யால் இயற்றப்பட்டவை.

	ரூ.	அ.	பை.		ரூ.	அ.	பை.
மாணிக்கவாசகர்	0	8	0	பாலாமணி 2-பாகங்கள்	2	8	0
திலோத்தமா	0	12	0	கும்பகோணம் வக்கீல் ,,	3	0	0
வித்தியாசாகரர்	1	4	0	பூர்ணசந்திரோதயம் ,,	3	8	0
சௌந்தரகோகிலம்	1	8	0	காளிங்கராயன்கோ. ர. ,,	4	0	0
வஸந்தமல்லிகா	1	8	0	மதனகல்யாணி 3-பாகங்கள்	4	8	0

ராவ்சாகிப்-P. சம்பந்த முதலியார் அவர்கள் இயற்றிய நாடகங்கள்.

	ரூ.	அ.	பை.		ரூ.	அ.	பை.
நற்குலதெய்வம்	0	8	0	பேயல்ல பெண்மணியே	0	8	0
ரஜபுத்ரவீரன்	0	8	0	மார்க்கண்டேயர்	0	10	0
பிரஹஸனங்கள்	0	8	0	லீலாவதி சுலோசனா தன்	0	12	0
முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்	0	8	0	விஜயரங்கம்	0	12	0
				புத்த அவதாரம்	1	0	0
சபாபதி	0	8	0	ஹரிச்சந்திரன்	1	0	0
யயாதி	0	8	0				

இதர நாவல்கள்.

		ரூ. அ. பை.
கற்பகசுந்தரி	... ஆரணி-குப்புசாமி முதலியார் 2-பாகங்கள்	2 12 0
அமிர்தகுமாரி	... S. S. அருணகிரிநாதன்	1 4 0
பவளத்தீவு	... (ஒரே புஸ்தகம்)	1 8 0
மதுராம்பாள்	... ...	0 12 0
மூன்று வைரங்கள்	... ஆரணி - குப்புசாமி முதலியார்	0 6 0
மோகனா	... கோவை K. கிருஷ்ணசாமி ஐயர்	0 6 0
ஜனகாமோகன சாதுரியம்	... எஸ். ஜி. இராமனுஜலு நாயுடு	அச்சில்
சரஸ்வதிபாய்	... ...	அச்சில்
ஹம்ஸதேவி	... ...	அச்சில்
[illegible]	... K. G. [illegible]	0 4 0

குறிப்பு:—இவற்றைத் தவிர வேறு நாவல்களும் எம்மிடம் கிடைக்கும். தபாற்கூலி பிரத்தியேகம். "சரஸ்வதி" சந்தாநேயர்கட்கு மட்டும் ரூபாய்க்கு ஒரு அணா கமிஷன் கொடுக்கப்படும்.

மனோரஞ்சனி.

இது அற்புதமான நாவல் நிறைந்த மாதப் பத்திரிகை; தங்கமெடல்களும், நற்சாக்ஷிப் பத்திரங்களும் பெற்றவரான வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார் அவர்கள், பி. ஏ. பால் எழுதப்படுவது. இந்த வருஷத்திலும் "பூர்ண சந்திரோதயம்" என்ற மகா விநோதமான நாவலே வந்துகொண்டிருக்கிறது. மற்ற விவரங்களுக்கு உடனே எழுதுங்கள்.

கே. விஜயம் கம்பெனி,

இராயப்பேட்டை சென்னை.

பிரஜாநுகூலன்.

1904-ம் வருட முதற்கொண்டு நடைபெற்று வரும் அபூர்வ அநுபவங்கள் அடங்கிய மாதாந்தப் பத்திரிகை. இது கதைகளுக்கும் நாவல்களுக்கும் மிகவும் பெயர்பெற்றது. பிரபஞ்ச அநுபவங்களை வெகு நன்றாக எடுத்துக் காட்டுகிறதென்று எல்லோராலும் புகழப்படுவது. உலகத்தில் பிரதியொரு மனிதனிடத்திலும் நிகழப்படாநின்ற அநுபவ விஷயங்களைத் திரட்டிக் கதாரூபமாகக் கொடுப்பதே இப்பத்திரிகையின் நோக்கம். இதில் பிரதி மாதமும் வருகிற 'பிரபஞ்ச விலாசம்' வெகு உல்லாசம். எல்லாம் பெண்மணிகளின் சார்பையே பெரிதும் தழுவி நிற்பது. ஒவ்வொரு இல்லத்திலும் அவசியம் இருக்கவேண்டிய அபூர்வ பொக்கிஷம்.

வருட சந்தா	...	ரூ.	2 0 0
வெளிநாடுகளுக்கு	...	ரூ.	3 0 0

பிரஜாநுகூலன் ஆபீஸ்,

மேல அடையவளஞ்சான் வீதி, ஸ்ரீரங்கம் (திருச்சி).

Printed at the Kesari Printing Works, Triplicane, Madras.

221858